விலை: யாழ். ரூ.30, வன்னி ரூ.20 பக்கங்கள் 56

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 C
கு.வெ. 26 C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 256 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 24, ஞாயிற்றுக்கிழமை 09.08.2015

## போர்க் குற்றவாளிகளை கூண்டில் ஏற்றுவதற்காக தமிழரே வாக்களியுங்கள்

### கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9
ராஜபக்ஷவின் கொடூர ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் கூண்டில் ஏற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என ஐ.நாவுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவும், இலங்கையில் 60 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு 2016ஆம் ஆண்டில் கிடைக்கவேண்டும் என அரசையும் சர்வதேச சமூகத்தையும் வலியுறுத்தவும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் வாக்காளர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தவறாது வாக்களிக்கவேண்டும்.
இவ்வாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் (இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட்) தலைவர்கள் கூட்டாக அறைகூவல் விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-
தமிழினத்திற்கு எதிராகத் திட்டமிட்டு இழைக்

பக்கம் 21

## மாற்றத்தை நாம் விரும்பவில்லை

### முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 9
விவசாய அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தியையே நாங்கள் நாடி நிற்கின்றோம். சிறிய இடைநிலை தொழில் முயற்சிகளில் ஈடுபடவே நாங்கள்

பக்கம் 21

## மன்னார், திருமலையில் போலி வாக்குச் சீட்டுகள்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குறுக்கு வழியில் தோற்கடிக்கச் சதி

யாழ்ப்பாணம், ஓக.9
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், மக்களைக் குழப்பும் வகையில் போலியான வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்துக்கு எதிரில் புள்ளடியிட்டு விநியோகிக்கப்படும் இந்தப் போலி வாக்குச் சீட்டுக்களில், தமிழ்த் தேசியக்

பக்கம் 21

## மீண்டும் பொட்டு



யாழ்ப்பாணம், ஓக.9
சுழிபுரம் சந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், உரையாற்றிக் கொண்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான ஈ.சரவணபவனுக்கு, கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளர் ஒருவர் இரத்தத்தால் திலகமிட முற்பட்டார்.

பக்கம் 21

## வடக்கில் 94 வீத தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணம், ஓக 9
தபால்மூல வாக்களிப்பு நேற்றுடன் முடிவடைந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் 94 சதவீத வாக்களிப்பு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்

பக்கம் 21

## அரசு எம்முடன் பேசவேயில்லை

### ரணிலின் கூற்றை மறுக்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஓக. 9
ஐ.நா. அறிக்கைக்குப் பதிலளிப்பதற்கு இலங்கை அரசு, கூட்டமைப்புடன் எந்தப் பேச்சையும் நடத்தவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்

பக்கம் 21

## எக்னெலிகொட கடத்தலில் கருணா குழுவுக்கு தொடர்பு?

### கைதான இருவரும் விளக்கமறியலில்

கொழும்பு, ஓக.9
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட கடத்தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்ட விவகாரத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள இருவரும், கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை விளக்கமறியலில் வைத்து விசாரணை மேற்கொள்ள ஹோமகம நீதி மன்றம்

பக்கம் 21

## பொலிஸ் வாகனத்துடன் மோதி இளைஞர் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 9
தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் வாகனத்துடன் மோதிய இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு 10.15 மணியளவில் இடம்பெற்றது.
கந்தரோடையை சேர்ந்த ரவிச்சந்திரன் யனுஜன் (வயது 26) என்பவரே சம்பவ இடத்தில் உயிழந்தவர் ஆவார்.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை அண்டியபகுதியில்பொலிஸார் தங்களுடைய வாகனத்தை

பக்கம் 21

## மன்னார் ஆயரின் சிகிச்சைக்கு உதவி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.9
மன்னார் ஆயரின் சிகிச்சைக்கு உதவி செய்ய விரும்புகின்ற இங்குள்ள மக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளை, ஆயர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்னார் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி விக்டர் சோசை தெரிவித்துள்ளார்.
மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்குப் பயணமாகிறார். அங்கு 6 வாரங்கள் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சையை

பக்கம் 21

## 45 கிலோ கஞ்சாவுடன் 4 பேர் கைது

வடமராட்சி, ஓக. 9
வல்வெட்டித்துறை தொண்டமானாறு பகுதியில் பொலிஸார் நடத்திய அதிரடி சுற்றி வளைப்பில் 45 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டதுடன் நான்கு சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெறுவதாகவும், மேலும் சில சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருவதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பார் தெரிவித்தார்.
மாபெரும் கஞ்சா கடத்தல் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டிருப்பதாகப் பொலி

பக்கம் 21








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பின் பரப்புரை இன்று

வடமராட்சி, ஓக.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமாகிய இரா.சம்பந்தன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா மற்றும் பேச்சாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், ஏ.சுமந்திரன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன், சிறிகாந்தா ஆகியோரும், வல்வெட்டித்துறை முன்னாள் நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் மற்றும் அருந்தவபாலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-422)

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

வடமராட்சி, ஓக 9

இம்மாதம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையைஎதிர்நோக்கும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை வவுனியா அல்காமிய முஸ்லிம் பாடசாலையிலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

செட்டிகுளம் பிரதேசசெயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்குக்குச் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வாழ்வெழுச்சி பிரதேச உத்தியோகத்தர் ந.சுசீந்திரராஜா அறிவித்துள்ளார். (த-422)

## தேர்தல் வன்முறை இடம்பெறலாம்

*அமெரிக்கா எச்சரிக்கை*

நியூயோர்க், ஓக. 9

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அங்கு தேர்தலை ஒட்டி வன்முறைகள் இடம்பெறலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்குச் செல்லும், இலங்கையில் வதியும் தமது நாட்டுக் குடிமக்கள் இத்தகைய தேர்தல் வன்முறைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூர் ஊடகங்களை அமெரிக்க குடிமக்கள் தொடர்ச்சியாகக் கண்காணித்து வர வேண்டும் என்று அது கேட்டுள்ளது.

அமைதியான முறையில் நடக்கின்ற பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக திரும்பலாம் என்பதால், இத்தகைய பேரணிகள், போராட்டங்களில் பங்கேற்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் வன்முறைகள் இடம்பெறலாம் என்று ஏற்கனவே, ஆஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

# நான்கு முக்கிய மாவட்டங்களில் பாதாள உலகக்குழு பரப்புரையில்

கபே அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.9

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தேர்தல் பரப்புரைகளில் பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் நேரடியாகச் சம்பந்தப்பட் டிருக்கும் நிலைமைகள் காணப்படு வதாக கபே அமைப்பு தெரிவித் துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கொழும்பில் பெரிய உருவப்பட பரப்புரைப் பலகைகளை நிர்மாணிக்கப் பங்களிப்பு வழங்கியவர்கள் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் புதிய அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கம்பஹா மாவட்டத்தில் பிரபல அரசியல்வாதிகள் சார்பில் பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் வீட்டுக்கு வீடு சென்று பரப்புரைகளில் ஈடு பட்டு வருகின்றனர். கம்பஹா மாவட்டத் தில் பாரியளவில் சட்ட விரோத பரப்புரை நடவடிக்கைகளுக்கு இவர்கள் உதவி வருகின்றனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரண்டு பாதாள உலகக் குழுக்கள் இடையில் மிக நீண்டகாலமாக மோதல் இருந்துவருகிறது. இதன் பிரதிபலனாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த மாவட்டத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டார். கொல்லப்பட்டவரின் குழுவுக்கு எதிரான குழு மற்றைய அரசியல் கட்சியுடன் இணைந்து தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மற்றும் கண்டி மாவட்டங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் இரண்டு நிறுவனங்களின் உரிமையாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்கள் இராணுவத்தில் இருந்து தப்பியவர்கள் மற்றும் பல்வேறு நட வடிக்கைகளுடன் தொடர்பு டைய நபர்களை தமது சேவைக ளில் நீண்ட காலமாக ஈடுபடுத்தி வருகின்றனர். இந்த இரண்டு குழுக்களுக்கு இடையில் எந்த நேரத்திலும் மோதல் ஏற்படலாம் எனவும் கீர்த்தி தென்னக்கோன் கூறியுள்ளார். (த)



*வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்புரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த ஆடிக் கார்த்திகைப் பெருவிழாவை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை காலை முதல் விசேட பூசை வழிபாடுகள் மற்றும் மேளக் கச்சேரிகள், கதாப் பிரசங்கம் என்பன இடம் பெற்றன. விசேடமாக அடியவர்கள் முருகனுக்கு சாமி, தினை கொண்டு மா விளக்கிட்டதுடன் காவடிகளும் எடுத்தனர். (த-86)*

# ரவியின் ஆதரவாளரை சுட்டவர்கள் யாழில்

கொழும்பு , கொட்டாஞ்சேனை –புளூமெண்டல் பகுதியில் கடந்த மாதம் 31ஆம் திகதி நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான ரவி கருணாநாயக்க கலந்துகொண்ட தேர்தல் பரப்புரைப் பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்துக்குத் தப்பி வந்துள்ளனர் எனப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தப்பிவந்த சந்தேகநபர்கள் நால்வரும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட வடமராட்சி கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முற்பட்டுள்ளனர் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தற்போது, மாதகல் கடல் பகுதியிலிருந்து வடராட்சி கிழக்குப் பகுதி வரையான கடலோர மார்க் கங்களில் பொலிஸார் குவிக்கப்பட் டுள்ளதுடன், பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி சந்தேகத்துக் கிடமான வாகனங்களைச் சோதனை செய்து வருகின்றனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் சிங்களவர்கள் மூவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவரும் அடங்குகின்றார். (த)

# தமிழரின் அதிகாரப் பகிர்வுக்கு விரைந்து நடவழக்கை தேவை

மோடியிடம் வலியுறுத்தினார் ஜெயா

இலங்கை அரசியல் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின்படி, அங்குள்ள தமிழர்கள் அரசியல், சுய நிர்ணய உரிமையைப் பெற வேண்டும் என்றும் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

தேசிய கைத்தறி தின நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் ஜெய லலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது மீனவர் பிரச்சினை, கச்சதீவு விவகாரம், இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட 19 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை நரேந்திர மோடியிடம் முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

இந்தப் பிராந்தியத்தில் வலிமையான நாடான இந்தியா, இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக, உறுதியான நிலையை எடுக்க வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த ஐ.நா. மனித உரிமை சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் இந்தியா போராடவேண்டும்.

கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்த பிறகு, தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமை பாதிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக 1974, 1976 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை ரத்துச் செய்வதுடன் கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்றுள்ளது.(த)

# வடமாகாண இறைவரி ஆணையாளராக சிவாஜி

யாழ்ப்பானம், ஓக. 9

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை, தரம் 1 இல் ஆணையாளராகப் பணியாற்றும் பாலசுந்தரம் சிவாஜி, மத்திய அரசின் நிதி அமைச்சின் கீழ் வரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வடமாகாண சபையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இறைவரித் திணைக்களத்தில், மாகாண இறைவரிச் சேவையில் ஆணையாளராக நியமிக்கப்படுவதற்குரிய அனுமதியை அரச சேவை ஆணைக்குழு அண்மையில் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாண இறைவரி நிர்வாகத்துக்குப் பொறுப்பாக வடமாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் பிரதம செயலாளர் வழங்கிய நியமனத்தின் அடிப்படையில், விரைவில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ள சிவாஜி, வடமாகாண இறைவரித் திணைக்களத்தில் முதலாவது ஆணையாளராக நியமனம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 25 ஆண்டுகளாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றிவரும் சிவாஜி 2011 – 2013 வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்குப் பொறுப்பாகப் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றிய காலப் பகுதியில், போர்க் காலத்தில் சீர்குலைந்திருந்த வரி நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினதும் வர்த்தக சமூகம் மற்றும் வரி செலுத்துவோர் அனைவரினதும் பாராட்டைப் பெற்றிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் சிறப்புப் பட்டத்தையும், யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் தொடர்ந்து வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பருத்தித்துறை சித்திவிநாயகர் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் புதல்வரும் வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவருமாவார். (த)

# தற்கொலை செய்யவுள்ளதாக பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பிய பாடசாலை மாணவன்

வடமராட்சி, ஓக. 9

பருத்தித்துறை நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளியைப் பெற்றமையால் தான் தற்கொலை முயற்சி செய்யவுள்ளதாகவும் தன்னைக் காப்பாற்றும் படியும் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குக் கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்.

தற்போது 2ஆம் தவணைப் பரீட்சை முடிவடைந்த நிலையில் தனக்கு தவணைப் பெறுபேறு குறைந்துள்ளதாகவும், அதனால் பெற்றோரின் தண்டனைக்குள்ளாக நேரிடவுள்ளதால் தான் அத் தண்டனைக்கு அஞ்சித் தற்கொலைக்கு முயற்சிப்பதாகவும், தன்னைக் காப்பாற்றும் படியும் தனது பெயர் குறிப்பிடாமல் பருத்தித்துறை பிரதேச செயலகத் துக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். இது தொடர்பாக பருத்தித் துறை சமூக நல உத்தியோகத்தர் பாடசாலையின் அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். கடிதம் பெயர் குறிப்பிடப்படாமல் இருப்பதனால் மாணவனைத் தாம் அடையாளம் காணமுடியாதுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கைகள் ஒவ்வொரு தவணையும் மாணவர்களின் பெற் றோர்களை அழைத்தே கல்விநிலை பற்றிக் கலந்துரையாடி வழங்கப் பட்டு வருகின்றன. இதனால் கடந்த முதலாம் தவணைப் பெறுபேற்றில் குறிப்பிட்ட மாணவன் குறைந்த புள்ளியைப் பெற்றதையடுத்துப் பெற்றோரின் தண்டனைக்குள்ளாகி யுள்ளதாகவும், இம்முறை நடைபெற்ற 2 ஆம் தவணையிலும் குறைந்த புள்ளியைப் பெற்றமையால் பெற்றோரின் தண்டனைக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் என்பதனையடுத்தே தாம் இம் முயற்சியை மேற்கொண்ட தாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூரிய ஆயுதங்களால் தாக்கி ஒருவர் கொலை

பண்டாரவளை எடம்பிட்டிய பிர தேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய் யப்பட்டுள்ளார். இரண்டு குழுக்க ளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமா கவே இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள் ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல ஈ தீகல்ல பிரதேசத்தில் வசித்த இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார். சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் எடம் பிட்டிய பொலி ஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (த)

## Assistant Branch Manager - Jaffna

Application are invited from suitably qualified and experienced candidates for the above position.

Requirements:

- Should possess a minimum of 3 years' experience as an officer in a licensed commercial bank in Sri Lanka
- Thorough knowledge of branch operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university or equivalent professional qualifications.
- Should have flair for marketing and business development.

Candidates have to furnish in their application the full details of the present salary and expected salary for the post applied for.
Interested candidates may forward their curriculum vitae under registered post, along with photocopies of documents in support of age, qualifications and experience to:

*The Country Head*
**State Bank of India**
*16, Sir Baron Jayatilake Mawatha, Colombo- 01*
*Phone: 444 6800 e mail: careers.lk@statebank.com*
*Visit us at www.sbisrilanka.net*

SKYLINE

Serving Sri Lanka since 1864

## பாராளுமன்றத் தேர்தல் – 2015
யாழ் மாவட்டம்

### மாபெரும் பரப்புரைக் கூட்டமும் இசை நிகழ்வும்

இடம் : மைக்கல் விளையாட்டுக் கழக மைதானம் - மாலிசந்தி
காலம் : 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 5.00 மணி

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்**

தலைமை
திரு.ச.சுகிர்தன்
(மாகாணசபை உறுப்பினர்)

பிரதம பேச்சாளர்கள்
திரு. இரா. சம்பந்தன்
(மு.பா. உறுப்பினர். தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

திரு. மாவை. சேனாதிராஜா முதன்மை வேட்பாளர்
(மு.பா. உறுப்பினர்,தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சி)

பேச்சாளர்கள்
திரு.எம். ஏ. சுமந்திரன் (மு.பா. உறுப்பினர்)
திரு.க.சுரேஸ் பிரேமச்சந்திரன் (மு.பா. உறுப்பினர்)
திரு. த. சித்தார்த்தன் (மு.பா. உறுப்பினர்)
திரு. ஈ. சரவணபவன் (மு.பா. உறுப்பினர்)
திருமதி. மதினி நெல்சன் (மு.நகரசபை. உறுப்பினர்- பருத்தித்துறை)
திரு. ந. அனந்தராஜ் (மு.நகரசபைத் தலைவர் - வல்வெட்டித்துறை
திரு. சி. சிறிதரன் (மு.பா. உறுப்பினர்)
திரு. சிறிகாந்தா (மு.பா. உறுப்பினர்)
திரு. க. அருந்தவபாலன்

அனைவரும் திரண்டு வந்து
ஆதரவு தாருங்கள்
- ஏற்பாட்டாளர்கள்

TNA
Tamil National Alliance

## பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்

X 7

**அர்ப்பணிப்பு! அனுபவம்!! நேர்மை!!!**

7



அகிம்சாவாதி
அமரர்.வி.தர்மலிங்கம்
(முன்னாள் மானிப்பாய் / உடுவில் தொகுதி பா.உ)

## திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)

- யாழ் மக்கள்


**தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)**

## பாராளுமன்றத் தேர்தல் - 2015

### தமிழ் தேசிய கூட்டமைப்பு (TNA)
### வன்னி மாவட்டம்
(வவுனியா, மன்னார், முல்லைத்தீவு)

**வன்னியின் வளர்ச்சிக்கு வரலாறு படைப்போம்**

X 4



## கந்தையா சிவநேசன் (பவன்) J.P
(வடமாகாணசபை உறுப்பினர்)

01. வேலையற்ற பட்டதாரிகளின் பக்கச் சார்பற்ற உடனடி வேலைவாய்ப்பிற்கு....
02. இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பினை அதிகரித்தல்
03. இளைஞர்கள் ஊடாக சமூகப் பொறுப்புக்களை அதிகரித்தல்
04. பிரதேச இளைஞர் கழகங்களின் ஊடாக திறமையான இளைஞர்களை இளைஞர் பாராளுமன்றம் அனுப்பப்பாடுபடல்
05. உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைத் தேர்தல்களில் தகுதியான இளைஞர்களை சமூகத்திற்கு அறிமுகம் செய்தல்

**“உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்”**

பட்டதாரிகளுடன் பல்கலைக்கழக மாணவர்கள்
- வன்னி மாவட்டம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெறுமதிமிகு உங்கள் வாக்குகள் தகுதி கொண்டோரைச் சேரட்டும்

நடைமுறையிலுள்ள அரசமைப்பின் கீழ் இடம்பெறும் இலங்கை நாடாளுமன்றத்துக்கான எட்டாவது பொதுத்தேர்தல் இன்னும் ஒரு வாரத்தில் -- இம்மாதம் பதினேழாம் திகதி திங்கட்கிழமை-- நடைபெற உள்ளது.

அதனை முன்னிட்டு, தேர்தல் பரப்புரைகளும், கூட்டங்களும் பெரிய அளவில் வடக்கில் களைகட்டத் தொடங்கிவிட்டன. போட்டியில் தாம் வெல்வதில் தடை எதுவும் இருக்காது என்ற மனக்கணக்குடன், வேட்பாளர்கள் அதிவேகமாக மக்கள் சந்திப்புக்களையும் பரப்புரைக் கூட்டங்களையும் நடத்தி வருகிறார்கள்.

தேர்தல் காலத்தில் இது சகஜம் என்றாலும், போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை இம்முறை "எக்கச்சக்கம்" என்றாகி விட்டது. முந்தைய நாடாளுமன்றத் தேர்தல்களோடு ஒப்பிட்டால் கனத்துப், பருத்துப், பொருமிப்போய் உள்ளது!

போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அளவுக்கு அதிகமாகி விட்டதால், எண்ணிக்கை ஊதிப் பருத்து விட்டதால், எந்தக் கட்சிக்கு, எந்தக் குழுமத்துக்கு தனது புள்ளடியை இடுவது என்பது குறித்து திருவாளர் பொதுசனம் தள்ளாடுவதும் புலப்படுகிறது.

சும்மா சொல்லப்படாது, வடக்கில் மொத்தம் உள்ள ஏழு லட்சத்து எண்பத்தியிண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு வாக்காளர்களால், ஏழு உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

இத்தகைய பின்புலத்தில் நாடாளுமன்றத் தேர்தலின் போது, வடக்கு மாகாண வேட்பாளர்களிடையே கடும் போட்டி இப்போதே முகிழ்த்து விட்டது! முடிவு என்னவாகும் என்று எதிர்வுகூறல் எதனையும் இப்பொழுது இயம்ப இயலாத நிலை.

ஆகையால், நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், எந்தப்பக்கம் வெற்றிக்கொடி பறக்கும் என்று ஆரூடம் எதுவும் கூற இயலாது.

இத்தகைய நிலைமையில், வாக்காளர்கள் ஒவ்வொருவரும், தமது பொன்னான, பல லட்சம் ரூபா பெறுமதி உள்ள வாக்குகளை, தகுதியான வேட்பாளர்களை உரிய வழியில், சரியாகக் கணிப்பிட்டு, இனங்கண்டு வாக்களிக்க வேண்டும்.

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வேட்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்களைப் பகுத்துத் தொகுத்து, அவை எம்மக்களுக்கு எத்தனை பாகை பயன்தரும் என்பதனை சுயமாகச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்.

பல வழிகளாலும் நொந்து நூலாகிப் போயுள்ள எமது மக்கள்-- வாக்காளர்கள்-- அனுபவிக்கும் இடர்களை மனதார்ந்து வகுத்துப் பிரித்து, அவற்றைப் போக்க வேண்டும் என்ற உண்மையான அப்பழுக்கற்ற தூய்மையான உணர்வும், செயலாக்கத்திறனும் உள்ளவர்களை இனங்காண வேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க வாக்காளர்களாகிய உங்களுக்கே உண்டு.

வேட்பாளர்கள் பொதுவாகவே, வாய்ச்சொல்லில் வீரர்களாகவும், ஏன் புலமையாளர்களாகவும் இருப்பர், இருக்கக் கூடும்.

ஆனால் அவற்றுக்கு எல்லாம் "மசிந்து" விடாதீர்கள். அவர்கள் வெளிப்படுத்தும், பரப்புரை செய்யும் விடயங்கள், தகவல்கள் எல்லாமே அப்பழுக்கற்றவை என்று தப்பாகக் கணித்து விடாதீர்கள்.

வேட்பாளர்களின் வெளிப்படுத்தல்கள் எதுவாக இருப்பினும், அவை எவ்வகை சார்ந்தவை என்பவற்றை வகுத்துப் பகுத்து, நலன் தரும் வாக்குறுதிகளை உங்கள் சொந்தத்தில் தீர்மானியுங்கள். அதன் அடிப்படையில் உங்கள் பொன்னான வாக்குகளைப் பெறுமதியாக்குங்கள்.

அதன் மூலமே, நீங்கள் உங்களுக்குரிய மிக மிகப் பெறுமதி வாய்ந்த வாக்குரிமையை பவித்திரமாகப் பயன்படுத்தியவர்கள் ஆவீர்கள்.

# அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள் ஆராய்வு

### 11 கோரிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 9

வடமாகாண கல்வி நிலையில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்க விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு 11 கோரிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற் றது. இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின், வடமாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரியர் இடமாற்றச் சபைக்குரிய தொழிற்சங்கங்கள் தொடர்பாக 1914/8 இலக்க 12.05.2015 திகதிய விசேட வர்த்தமானிக்கு அமைவாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவு பின்பற்றப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சேவையின் அவசிய தேவை, மற்றும் ஏனைய காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் 2007/20 இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றச் சபைக்கு தெரிவிக்கப்படுவதில்லை எனவும், இது தவறு எனவும், இனி வரும் காலங்களில் இடமாற்றங்கள் தொடர்பாக இடமாற்றச்சபை யின் தொழிற்சங்க அங்கத்தவருக்கு அறிவிக்கப் படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, அரச பாடசாலைகளில் உப அதிபர், பிரதிஅதிபர் நியமிக்கப்படும் போது 07.01.2000 திகதியிடப்பட்ட 2000/4 சுற்றறிக்கையின் படி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். ஏனைய தரத்தினையுடைய அதிபர்களுக்கும் நேர்முகத்தேர்வுகள் ஊடாகவே பொருத்தமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்க ஆவன செய்தல்.

அண்மையில் வழங்கப்பட்ட அதிபர் இடமாற்றங்களில் பாரபட் சங்கள் தலைதூக்கியிருப்பது எமது சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றுள் சில அதிபர்கள் இடமாற்றங்களை தடுப்பதற்கு மாணவர்களை தூண்டி, தமது இடமாற்றங்களை தடுத்துள்ளனர். இத் தகைய செயற்பாடுகளில் அரசியல் பின்புலங்களும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. இத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்கக் கூடாது.

ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் ஞாயிறு மற்றும் போயா தினங்களில் நடைபெறுவதை தவிர்த்தல் வேண்டும். அத்துடன் செயலமர்வுகள் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்களுக்கு மேற்படாத வகை யில் செயற்படுத்தப்படவேண்டும். சனி, ஞாயிறு மற்றும் போயா போன்ற அரசாங்க விடுமுறை நாள்களில் தொடர்ந்து பரீட்சைகளை நடத்துதல் தவிர்க்கப்படுதல் வேண் டும்.

வடமாகாணத்தில் – ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தி வீதத்தினை அதிகரிக்கச் செய்தல் எனும் நோக்கில் பாடசாலையிலுள்ள பல பின்தங்கிய மாணவர்களை பரீட்சைக்கு தோற்ற அனுமதிப்பதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் தவணை விடுமுறை நாள்களில் பாடசாலை அதிபர்களினால் கட்டா யப்படுத்தி நேரசூசி தயாரித்து பாடசாலை போன்று விடுமுறை நாள்களிலும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் துன்புறுத்துவது உடன் நிறுத்தப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். ஆரம்பக் கல்வியில், அல்லது கற்பித்தலில் அக்கறை காட்டாது உள்ள கல்வி அதிகாரிகள் ஆரம்பக் கல்வியிலிருந்து எழுத்து மற்றும் கணித அறிவு குன்றிய மாணவர்களை ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்தில் வைத்து சித்தியடையச் செய்யலாம் எனும் நோக்கில் மேலதிகமாக திணிக்க முற்பட்டு வெற்றி காண முடியும் என எத்தனிப்பது பொருத் தமற்ற செயற்பாடாகும். இதற்காக ஆரம்பக் கல்விநிலையிலேயே விசேட செயற்திட்டங்களை மேற் கொள்வதே பொருத்தமாகும் என வும் தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டம், தீவகம் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் பாரபட்சமற்ற முறையில் உடனடியாக தீர்க்கப்படுதல் வேண்டும். சகல வலயங்களிலும் ஆசிரியர் உள்ளீர்ப்பு மற்றும் சம்பளமுரண்பாடுகள், பதவியுயர்வுகள் என்பன துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர் மத்திய நிலையத்துக்குரிய முகாமையாளர் எவ்வித நேர்முகப்பரீட்சையும் இன்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை முறையாக நடைமுறைப்படுத்தி நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்தல். பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் பல ஆசிரியர்களுக்கு சரியான முறையில் தகவல்கள் சென்றடையாமையினால் [illegible]டாந்த இடமாற்றம் 2016 இற்குரிய விண்ணப்பங்களை அனுப்பாது பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் விண்ணப்ப முடிவு திகதியை மேலும் ஒரு வாரம் நீட்டிக்கும் வண் ணம் கோருகின்றமை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது 2016 ஆம் ஆண்டுக்குரிய இடமாற்ற விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என வடமாகாண கல்விப் பணிப்பாளரால் தெரிவிக் கப்பட்டது.

அத்துடன் 2016 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த இடமாற்றம் வடமாகாணக் கல்விப் பணிப்பாளரால் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்ட [illegible] மாற்ற நிபந்தனைகளில் இடமாற்ற விண்ணப்பத்துடன் ஆசிரியர் செயற்பாடுகள் மற்றும் இணைபாடவிதான சாதனை கள் போன்றவை கேட்கப்பட்டிருப் பது பின்தங்கிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை பாதிக்கும் என்பதுடன் அர்ப்பணிப்புடன் வேலை செய்தும் போதிய சாதனைகளை பெறாத ஆசிரியர்களுக்குப் பாரபட்சங்களை ஏற்படுத் தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு இச் செயற்பாட்டு அறிக்கை ஆசிரியரின் தனிப்பட்ட தரவுக்காக மட்டுமேயன்றி, இடமாற்றங்களுக்கு இவை பாதிப்பு ஏற்படுத்தாது என வடமாகாணக் கல்விப் பணிப் பாளரால் உறுதி வழங்கப்பட்டது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# தாஜுதீன் கொலைக் குற்றச்சாட்டு; அடியோடு நிராகரிக்கிறார் நாமல்

### தமது குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என்றும் தெரிவிப்பு

கொழும்பு, ஓக .9

ரக்பீ வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் தமது குடும்பத்தின்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை அடியோடு நிராகரிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வசீம் தாஜுதீன் தமது குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என்றும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். நாம் அவரின் வீட்டுக்குச் சென்று அவரின் அம்மா, சகோதரர்களுடன் ஒன்றாக வாழ்ந்துள்ளோம். உண்டு, குடித்துள்ளோம். அவர் சிறந்த நண்பர். நெருங்கிப் பழகிய ஒருவர். 5, 6 வருடங்களாக ஒரு அணியில் விளையாடிய ஒருவர். இலங்கைக்காக ரகர் விளையாடிய ஒருவர் என்றும் நாமல் கூறியுள்ளார்.

அந்தக் கொலை தொடர்பில் அநீதி இடம்பெற்றிருந்தால் நீதியை நிலைநாட்ட வேண்டும் எனக் கூறும் நாமல், அதை அரசியல்மயப் படுத்துவது அவரின் குடும்பத்துக்குச் செய்யும் அகௌரவமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னதாக ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது விரல் நீட்டுவதனூடாகக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் தாஜுதீனின் குடும்பத்துக்கு நீதி கிடைக்காமல் போகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

# எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்

## தேசத்தை உயிரூட்டுவோம்

## புதிதாகவே ஆரம்பிப்போம்

**உங்கள் ஆசியுடன் ஓர் அமைப்பாளராகவும், மாகாணசபை உறுப்பினராகவும் ஆளுமை மிக்க ஓர் இளைஞனாகவும் இருந்து நான் உங்களுக்கு ஆற்றிய சேவைத்துளிகள் சில. . . . . .**

- பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் வழங்கியமை
- சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கியமை
- நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்கியமை
- வங்கிகளுக்கு வங்கி உதவியாளர் நியமனம் வழங்கியமை
- கிராம சேவையாளர் நியமனம் வழங்கியமை
- நேர்மையான முறையில் ஆசிரியர் இடமாற்றம் செய்தமை

**மாகாணசபை உறுப்பினராக**

- வடமாகாணசபை ஆசிரியர் சேவைக்காலம் 6 ஆண்டுகளாக குறைத்தமை
- 274 கணித, விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கியமை
- யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்களது நியமனத்தை உறுதிப்படுத்தியமை
- விளையாட்டுத்துறை டிப்ளோமாப் பட்டதாரிகளை ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்களது நியமனத்தை உறுதிப்படுத்தி, மேலதிக வெற்றிடங்களுக்கு க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுத்தமை
- வலி வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கூடவே இருந்து கைச்சாத்திட்ட 1000 ஏக்கர் காணிகளை வர்த்தகமானி அறிவித்தலுக்கு அமைவாக உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தமை
- வடமாகாண கல்வித் திணைக்களங்களின் கீழும் சுகாதார தொண்டர்களாகவும் ஒப்பந்த அமைய அடிப்படையில் கடமை ஆற்றிய சுமார் 700 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை

உங்கள் அங்கீகாரம் கிடைத்து கடந்த காலங்களில் பதவியில் இருந்தோர் என்ன செய்தனர்?

எனக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும். . .
இன்னமும் மேலதிக அங்கீகாரங்களை
உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன் உங்கள் சேவகனாய்!



## அங்கஜன் இராமநாதன்

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும்
வடமாகாண சபை உறுப்பினர்)

X 1

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கவுள்ள Auto Mobile Company ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் கீழ் வரும் பதவிக்கு அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

* பெற்றோல் மெக்கானிக் (Petrol Mechanic)
* டீசல் மெக்கானிக் (Diesel Mechanic)
* Auto எலக்ரீசியன் (Auto Electician)
* சந்தைப்படுத்தல் அதிகாரி (Marketing Officer )
* A/C திருத்துபவர் (A/C Technician)
* சேவிஸ் மெக்கானிக் (Service mechanic)
* வாகனம் சுத்திகரிப்பாளர்/ கழுவுபவர் (Vehicle Cleaner)
* வரவேற்பாளர்(பெண்) (Receptionist - Female)

**Tyre & Wheel Aligement Technician**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**077 711 3590**

(61958) (9.3.7)



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிற்கு FMCG பொருள்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை பரவலாக்க இருக்கும் எமது நிறுவனத்தில் கீழ்க்காணப்படும் வெற்றிடங்கள் உள்ளன.

* தரவுகள் கணினிப்படுத்துனர் Data Entry Operator - 1 வெற்றிடம்
* Management Trainees (Sale-3, Marketing-3, Finanee1) 7 வெற்றிடம்
* வரவேற்பாளர்/ தொலைபேசி இயக்குனர் - 1வெற்றிடம்
* பாதுகாவலர் Security Guards 2 வெற்றிடம்

குறைந்தது 2 வருடங்கள் முன் அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரும் 17.08.2015ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். வேதனம் பேசித் தீர்மானிக்கலாம்.

பிராந்திய முகாமையாளர்,
(M/S KINGS GROUP OF COMPANIES)
A9 ,கண்டி வீதி மிருசுவில் ( MIRUSUVIL)



## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மண மக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

T.P. NO: 077 138 7596, 021 222 9306
T.P. NO: 075 554 6000, 071 894 5692
Email: nakapoosanywedding@gmail.com
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)

(எமக்கு வேறு கிளைகள் எதுவுமில்லை)

வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.



## வேலையாள்கள் தேவை

* U.S. Hotel நிறுவனத்துக்கு பெண் வரவேற்பாளர் (Receptionist) தேவை.

குறிப்பு : தமிழ், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. தமது சுயவிவரக்கோவையுடன் திங்கட்கிழமை (10.08.2015) காலை 9.00 மணிக்கு 855, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமுகம் தரவும்.

* U.S. கேபிள் நிறுவனத்துக்கு வேலை தெரிந்த ஆண் வேலையாள்கள் தேவை.

**தொடர்பு - 077 524 3507**


## கூட்டமைப்பின் பரப்புரை இன்று

வடமராட்சி, ஓக. 9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமைமாலை 5மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா. சம்பந்தன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராஜா,மற்றும் பேச்சாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களான ஈ.சரவணபவன், ஏ.சுமந்திரன், க.சுரேஸ் பிரேமச்சந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன், சிறிகாந்தா ஆகியோரும், வல்வெட்டித்துறை முன்னாள் நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் மற்றும் அருந்தவபாலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-422)

## திரைப்பட இசை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.9

மனசுக்குள் ஒரு மழைச்சாரல் திரைப் படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ராஜ் மூவி வழங்கும் உதயரூபனின் மனசுக்குள் ஒரு மழைச்சாரல் எனும் இந்தத் திரைப் படத்துக்கு சுதர்சன் இசை வழங்கியுள்ளதுடன் திரைக்கதை, வசனம், படத்தொகுப்பு இயக்கத்தை வினோதன் மேற்கொண்டுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (த-ரி6)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அசைவ உணவகமொன்றுக்கு றொட்டி, கொத்துறொட்டி தயாரிக்க ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடனடியாகத் தேவை.

தொடர்பு : 077 125 8072

## வீடு தேவை

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு :
071 488 0844, 072 400 3571

## AAT புதிய பிரிவுகள் ஆரம்பம்

15.08.2015 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி
(O/L தகைமையுடன்) AAT1,AAT2, AAT3
அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்கள்
கற்கை நெறியை திறமையாக பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்களும் காத்திருக்கின்றன.

**Spectra skills,**
Stanley Road, (Peoples Bank 2nd Floor) Jaffna.s
Tel: 0212221422
Mobile: 0767520940

## மரண அறிவித்தல்



**பாலசிங்கம் லோகப்பிரகாசம்**

ஓய்வுபெற்ற (A.O நிர்வாக உத்தியோகத்தர்)
ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பா.லோகப்பிரகாசம் நேற்று (08.08.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், மதனி (ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), நமணன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) நமா (கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சாட்சரலிங்கம் (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) பகீரதி (தென்னை பயிர்செய்கை சபை M.A) வசந்தன் (இயக்குநர், இகேட் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சனைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் ,IVF,ICSI யும் கொடை முட்டை( donaor egg)விந்து நன்கொடை(donor sperm)போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில(UK); 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில் அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்குச் சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு திருமதி கௌரி
இல:0773439988,0212219988,0212219977,02122263

## வேலைவாய்ப்பு டோகா கட்டார்

Free Recruitment

| பதவி | எண்ணி. | சம்பளம் (QR) |
|---|---|---|
| டெயிலர் ஓட்டுனர் (Trailer Driver) | 100 | 2000 Rs.72,000 |
| டெயிலர் ஓட்டுனர் (Trailer Driver) | 25 | 1500 Rs.54,000 |
| பார ஊர்தி ஓட்டுனர் (Heavy Vehicle Driver) | 25 | 1800 Rs.64,800 |
| A/C டெக்னீசியன் (A/C Technician) | 10 | 1500 - 1800 Rs.54,000-64,800 |
| டக்ட்மென் (Duct man) | 10 | 1500 - 2000 Rs.54,000-72,000 |
| பிளம்பிங் போர்மன் (Plumbing Foreman) | 01 | 4000 - 6000 Rs.144,000-216,000 |
| பிளம்பர் (Plumber) | 15 | 1500 - 1800 Rs.54,000-64,800 |
| ஓடோ டெக்னீசியன் (Auto Electrician) | 02 | 1500 Rs.54,000 |
| கட்டிட மின்னியலாளர் (Building Electrician) | 10 | 1200 – 1500 Rs.43,200-54,000 |
| ஓடோ டென்டர்/பெயின்டர் (Auto Denter / Painter) | 10 | 1500 – 1800 Rs.54,000-64,000 |
| வெல்டர் (Arc / Gas ) Welder (Arc / Gas) | 10 | 1200 -1400 Rs.43,200-50,400 |
| வெல்டர்-வெள்ளை இரும்பு (Welder – Stainless Steel) | 05 | 1800 - 2000 Rs.64,000-72,000 |
| தளபாட தச்சன் (Furniture Carpenter) | 15 | 1200 – 1800 Rs.43,200-64,000 |
| மேசன் (கல்/ டைல்) Mason (Brick / Tile) | 15 | 1200 – 1800 Rs.43,200-64,000 |
| எக்ஸவேட்டர் இயக்குனர் (Excavator Operator) | 10 | 1400 Rs.50,400 |
| வாகன ஓட்டுனர் (Light Vehicle Driver) | 10 | 1600 Rs.57,600 |
| உதவியாளர் (Helper) | 15 | 1000 Rs.36,000 |

கட்டார் றியால் 1 = இலங்கை ரூபா. 36/-

CV Collection Only. No charges for CV Collection.

AL/2808/Advt/1/15

**nihaj OVERSEAS**
இல. 250 1/15, லிபர்டி பிளாஸா, கொழும்பு 03.
உடன் அழையுங்கள்- 0722522964 / 0777 591 777
தொ. : +94 11 7 689 666/67 பெக்ஸ் : 0117 689668
ஈமெயில்: info@nihajoverseas.com
L.No. 2808

## Family Rehabilitation Centre

**Psychosocial Workers**
Kilinochchi/Mullaitivu/Jaffna

Applicants must possess:
- A Degree/Diploma in counselling from a recognized institution (NISD)
- At least 3 years experience in counselling
- Computer literacy
- Fluency in local languages and working knowledge in English

The Psychosocial Worker is expected to work in the office as well as in the field. Remuneration will be around Rs. 27,500.00 and depending on the qualifications and experience.
Please forward your CV with 02 references within 10 days to: rc-north@frcsl.orgor to the following address:

**FAMILY REHABILITATION CENTRE (FRC)**
**No 395, Nagathampiran Lane,**
**Ananthapuram Kilinochchi.**

## DIAMAND INNOVATION GROUP
### Bussiness Promition officers
### அவசியம் 50 வெற்றிடங்கள்

உடனடியாகத் தொடர்புகொண்டு உங்களது பெயரை பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- முதல் 15,000/= - 20,000/= வரை.
- கம்பனி சிம், போக்கு வரத்துச் செலவு
- Bike or Car Allowence
- வயது 18 - 28
- ஆண், பெண் இருபாலாரும்.

சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு, முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 077 3561 495, 077 3561657, 0773562377 (61952) (10.8)

## விற்பனைக்குண்டு

ஆலயத்திலிருந்து அகற்றப்பட்ட ஊசிக்கால், தீராந்திகள், சீற்றுகள் மற்றும் கட்டடத்தில் இருந்து உடைத்த கற்கள் விற்பனைக்குள்ளன. தினமும் மாலை 5 மணிக்குப் பின்னர் பார்வையிட முடியும்.

தொடர்புகளுக்கு: தலைவர்
மணியர்பதி தேவஸ்தானம்
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (61918) (9.3.7)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு



நெல்லியடி சந்திக்கு மிக அருகில் 6 பரப்புக் காணியும் 4 அறை கொண்ட திருத்தி அமைக்கப்பெற்ற வீடு, குளியலறை, பெரிய கோல் (Hall), தனியாக விறாந்தாவுடன் கூடிய ஸ்ரோர், நல்ல தண்ணீர்க் கிணறு, காணி முழுவதும் 7 அடி உயர சுற்றுமதில், தென்னை, பலா போன்ற பயன்தரும் மரங்கள் காணி முழுவதும் (மாத வருமானம் 2000ரூபாய்) விற்பனைக்கு உண்டு. வீடு (1500) சதுர அடி. வீட்டுடன் 2 பரப்பும், காணி 3 பரப்பும் பிரித்துக் கொடுக்கப்படும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 892 8318
sachchik@hotmail.com

## La Passion
Hair, Beauty, Reflexology

இலங்கையில் முதல்தர சலூன்களில் ஒன்றான லா பசன் தற்போது யாழ்ப்பாணத்தில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் ஆண்கள், பெண்களுக்கான நவீன அழகுக்கலை நிலையம்

- கெயாக் கட் (Hair Cut)
- கெயாக் கலர் (Hair Colour)
- கெட் மசாச் (Head Massage)
- (F)பேஸ் மசாச் (Face Massage)
- (F)பேஸ் கிளீனப் (Face Clean -UP)
- (F)பேஸ் பிளீச் (Face Bleach)
- பேசியல் (Facial)
- ஸ்ரெயிற்ட்னிங் (Straightening Etc)

- கெயாக் கட் (Hair Cut)
- திரட்டிங் (Threading)
- கெயாக் கலர் (Hair Colour, High Lights)
- கெயா ரீட்மன்ட் (Hair Treadment)
- ப் லோடிரை அயனிங் (Blow dry & Ironing)
- ப்புள் டிரெஸ்சிங் (Make -Up, Saree drepe,Hairstyle)
- கெட் மசாச் (Head Massage)
- பேஸ் மசாச் (Face Massage)
- பிளீச்சிங் (Bleaching)
- வக்சிங் (Waxing)
- பெடிக்கியூர் (Pedicure)
- மெனிக்கியூர் (Manicure)
- பேசியல் (Facial)
- ஸ்ரெயிற்னிங் (Straightening)
- பேமிங் (Perming-முடி சுருட்டுதல்)
- ரிபோண்டிங் (Re - Bonding Etc)

ஆண்களுக்கு:- 8am to 9.00pm
பெண்களுக்கு:- 9am to 6.00pm

176, K.K.S றோட், யாழ்ப்பாணம்
Tel: 076 759 3357
www.lapassion salons.com



- பல் முக சிறப்பு (Consultant orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் டென்டல் கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731

## மலேசியா
HORIZONTECH COMPANY

### வேலையாட்கள் (ஆண்)

எண் 50 | சம்பளம் RM.900+OT

**நியதிகளும் நிபந்தனைகளும்**
- 03 வருட கால ஒப்பந்தம் மற்றும் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலங்கள் வேலை. 1 நாள் விடுமுறை
- வயது 18 முதல் 38 வரை
- வேலை பழகும் காலம்3 மாதங்கள்
- தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி இலவசம்
- மற்ற எல்லா நியதிகளும் நிபந்தனைகளும் மலேசிய நாட்டு தொழிற் சட்ட பிரகாரம்
- ஒப்பந்த கால முடிவில் திரும்பி வர இலவச விமான டிக்கட்

SR 1 = SL Rs.36.00 CV Collection Only No Fees Will Be Charge

**பான் குளோபல்**
ரெக்ருட்மன்ட் (பிரைவட்) லிமிட்டட்
Vacancies@pgrecruitment.com
0722105105, 0773502202, 0115300100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரை காட்டிக் கொடுக்க ஐ.தே.க. முயற்சி - மஹிந்த தரப்பு

வெள்ளைக்கொடி விவகாரத்தில் படையினரைக் காட்டிக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜெயந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளைக்கொடி விவகாரத்தில் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக புதிய அரசு பொறுப்பில்லாமல் செயற்படுகிறது. இந்த விவகாரத்தில் இராணுவத்தைக் காப்பாற்றாமல், சர்வ தேச விசாரணையில் சிக்கவைக்கவே அரசு முயற்சிக்கின்றது. கசிந்துள்ள, ஐ.நா. அறிக்கையின் இரகசியங்களிலும், இராணுவத்தின்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது. இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணைகளை மேற் கோள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தொடர்ச்சியாக பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஐ.தே.க.வுக்கும், அவர்களுடன் புதிதாகக் கூட்டுசேர்ந்திருக்கும்நபர்களுக்கும் நாட்டையும், நாட்டைக் காப்பாற்றிய இராணுவத் தினரையும் காப்பாற்றும் நோக்கம் இல்லை. மாறாக நாட்டையும், இராணுவத்தையும் காட்டிக் கொடுக்கவே முயற்சிக்கின்றனர்–என்றார். (த-5)


## மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி-2015

Drayton Post office & stores London இன் அனுசரணையில் மாதனை விளையாட்டுக்கழகம் பெருமையுடன் நடத்தும் யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் கழகங்களுக்கான 11 பேர் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி-2015

இடம் : மாதனை கிரிக்கெட் மைதானம்
காலம் : 22.08.2015
முதலாம் பரிசு : 15000 ரூபா பணப்பரிசு
2ஆம் பரிசு : 10000 ரூபா பணப்பரிசு

காலிறுதி ஆட்டத்தில் இருந்து ஆட்டநாயகன் விருது வழங்கப்படும்

குறிப்பு : 12.08.2015 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் கழகங்களுக்கு மட்டுமே போட்டியில் பங்குபெற முடியும்.

மேலதிக விவரங்களுக்கு:
(61962) (10.8) 0776064238, 077 617 6499, 077 444 8787


## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1925 | 2015 |
| 09 | 06 |
| 29 | 27 |

### திருமதி திரேசா சதாசிவம்

புதுக்குடியிருப்பு சிவநகர் 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திரேசா சதாசிவம்(நேசமக்கா-இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் 41 ஆம் நாள் நினைவு தினம் அவரின் இல்லத்தில் 10.08.2015 திங்கட்கிழமை நடைபெறும். அன்று மதியம் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :- கணவர் சதாசிவம்(ஆசிரியர்)
மருமகன் சிவராசா(தம்பி அண்ணன்)
குடும்பத்தினர். (c 11974)

## மரண அறிவித்தல்

### திருமதி கோகிலராஜலக்ஷ்மி பரமேஸ்வரன்

மலர்வு 12.09.1954 உதிர்வு 05.08.2015



திருமதி கோகிலராஜலக்ஷ்மி பரமேஸ்வரன் (கனடா) 05.08.2015 புதன்கிழமை கனடா நேரம் காலை 8.10 மணியளவில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரனின்(கனடா) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருநெல்வேலி கிழக்கைச்சேர்ந்த நடராசா புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும் சேர் பொன் ராமநாதன் வீதியைச் சேர்ந்த அப்புத்துரை காலஞ்சென்ற அன்னம்மா தம்பதியரின் மருமகளும் புஸ்பராஜலக்ஷ்மி, விஜயவேல் குமாரன்(மைக் இன்டஸ்ரீஸ், யாழ்ப்பாணம்), அருந்தவராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்பு சகோதரியும் மகேஸ்வரி,காலஞ்சென்ற திருநாவுக்கரசு, துரைராஜா, இந்திராதேவி, நிசாகரநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாத்வீகி, நதீஸ், தீபிகா, வர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரின் அன்பு மாமியும் அக்சரா, யாசிகனின் பிரியமுள்ள பேர்த்தியும் அகன், ஆதவன், இமாலயன், ஈசபிரியினி ஆகியோரின் ஆசை சித்தியும் யனகன், திரிஷா, வித்யாங்கி ஆகியோரின் பாசமிகு சின்னமாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை சப்பல் றிட்ஜ் அந்திம சேவைஇல்லத்தில் 5.00 pm-9.00 pm வரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 10.08.2015 திங்கட்கிழமை கனடா நேரப்படி காலை 8.00-9.15 மணிக்கு இடையில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக எல்சின் மில்ஸ் மயானத்திற்கு (1591, எல்சின் மில்ஸ் வீதி கிழக்கு, றிச்மன்ட் கில்ஸில் அமைந்துள்ள மயானம்) நண்பகல் 12 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- நடராஜா விஜயவேல்குமாரன்(சகோதரன் கொழும்பு)
0094 112 505601/0094 112 552595
பரமேஸ்வரன் நதீஷ்(மகன்-கனடா)
001 416 281 8666/001 647 545 8462 (c 11880)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் நாகலிங்கம் தங்கராசா

(வெளிநாட்டு தங்கராசா)



அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
077 104 3353 (பாலா)

## மரண அறிவித்தல்

### இம்மானுவேல் றெவல்

மன்னார் முள்ளிக்குளத்ததைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இம்மானுவேல் றெவல் 23.07.2015 அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் சந்தியோகு றெவல் மேரிதிரேசா தம்பதியரின் அன்பு மகனும் அருட்தந்தை செபஸ்ரியான் றெவல்லின் (சுவின்) அ.ம.தி பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (10.08.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முள்ளிக்குளம் புனித பரலோகமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு முள்ளிக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முள்ளிக்குளம்
மன்னார் (61990)

தகவல் :-
அருட்தந்தை செபஸ்ரியான் றெவல்
(சுவின்) அ.ம.தி
077 190 0225




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 X

வாக்கிடுங்கள்



30 வருடங்களாக ஓயாத விலைபோகாத தலைமை

# ஈஸ்வரபாதம் சரவணபவன்

[முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்]

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களை வலுவூட்டுவதற்கான கலந்துரையாடல்

தென்மராட்சி ஓக.9

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நிறுவன மட்டத்திலான டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களை வலுவூட்டுவதற்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிப. 1.00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்கள் தமது அலுவலக டெங்கு கட்டுப்பாட்டிற்குப் பொறுப் பான அலுவலரை கலந்துரையாடலில் பங்குபற்ற அனுப்புமாறு நிறுவனத் தலைவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி க.தயாளன் அறிவித்துள்ளார். (த-9)




## சிறுமியை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, ஓக. 9

11 வயதுச் சிறுமியை படுக்கையில் வைத்துத் பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை வடக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த வரதராஜாவாணதி(வயது11) என்னும் சிறுமி பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## நீதி மறுக்கப்பட்ட எம்மக்களின்
## நீதிக்காய் குரல்கொடுத்த எங்கள் வாதி
## என்றும் சோர்விலா மைந்தன்

| தன்னம்பிக்கை | தன்னிறைவு | தன்னாட்சி |
|---|---|---|

# M.A சுமந்திரன்

X

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2015

அறப்பணி பலதும் செய்தான்
இறப்பின்றித் தமிழைக் காத்தான்
உறக்கமே இன்றி
ஊருக்கு உத்தம செய்தி சொன்னான்
மறத்தமிழ் மாண்பு காத்தான்
வறட்சியே இன்றி
வாரி வழங்கிடும் கைகள் கொண்டான்
புறத்தவர் புரியும்வண்ணம்
தமிழரின் துயரம் சொன்னான்
சிறப்போடு பாராளுமன்றில்
சிங்கார முழக்கம் செய்தான்
இறக்கைகள் கட்டி
நல்ல இடையறாச்சேவை செய்தான்
மறப்பரோ தமிழர் எமக்காய்
மாண்புறு சேவைசெய்த
பிறப்பினால் எமக்காய்ப் பிறந்த
சரவணபவனான் தன்னை
திறத்தினால் மீண்டும்
பாராளுமன்றினுள் செல்லவைக்க
கறந்துநம் வாக்குகளையெல்லாம்
வீட்டிற்கும் ஐந்திற்குமிட்டே
துறந்ததெல்லாம் மீட்டுவர அனுப்புவோம்
தமிழரசுக்கட்சியூடே!

**வட்டுக்கோட்டை**
**தொகுதி மக்கள்**


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



ஈஸ்வரபாதம்
## சரவணபவன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

X 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 229

# குறட்டையும், குறைக்கும் வழிகளும்



ஒவ்வொரு மனிதனுக்கும் தூக்கம் ஒரு வரப்பிரசாதம். மனித வாழ்வெனும் விருந்துக்குத் தலையாய போஷாக்கை அளிக்கும் ஆழ்ந்த உறக்கம், நாள் முழுக்க வேலை செய்யும் உடலின் அனைத்து உறுப்புக்களுக்கும் ஓய்வை வழங்குவதுடன், களைப்பைக் குறைத்து, உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சியை வழங்குகின்றது. ஒவ்வொரு தனிநபரும் தத்தமது வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியைத் தூக்கத்திலேயே செலவிடுகின்றார்கள். எனினும் தூக்கத்தில் அவர்களை அறியாமல் ஏற்படுகின்ற பிரச்சினை குறட்டை. இது வயது வித்தியாசம் இன்றி எல்லோரிலும் ஏற்படக் கூடியது. ஒருவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது பலமான குறட்டை கேட்கும். அது அவருக்குக் கேட்காதுவிடினும், மற்றவர்களை இம்சைப்படுத்தும். பொதுவாக நாம் மூச்சுக் காற்றை வெளிவிடும் போது அது தொண்டை, அண்ணம், வாய்வழியாக வெளியேறுகிறது.

எனினும் நாம் உறங்கிய பின்பு எமது சுவாசக் குழாயில் உள்ள தசைகள், இழையங்கள் சற்றுத் தளர்ச்சியடைகின்றன. இதனால் காற்றுவெளியேறும் பாதை குறுகுகின்றது. இந்த அடைபட்ட அழுத்தம் நிறைந்த காற்றானது, எந்தவித தடையுமின்றி வெளியேறுகிறது. தளர்ச்சி அடைந்துள்ள சுவாசக்குழாய், தொண்டையின் பின்புறத் தசைகள் அண்ணம் போன்றவற்றில் மோதித் தடைப்பட்டு அதிர்வை ஏற்படுத்தி, வெளிவரும் போது குறட்டை ஒலி வெளிப்படுகின்றது.

ஒரு புல்லாங்குழலின் துவாரங்களைச் சிறிது அடைத்த வண்ணம் ஊதும் போது, எவ்வாறு இசையுண்டாகிறதோ, அதேபோல் எமது மூச்சுக் குழலில் அடைபட்ட அழுத்தத்துடன் உள்ள காற்றானது வெளிவரும் போது, சில தடைகளை ஏற்படுத்தும் போது குறட்டை ஒலியாக வெளிவருகிறது.

அந்தக் குறட்டைச் சத்தமானது, சிலருக்கு 40 - 60 டெசிபல் (Decibel) வரை செல்கின்றது. இது ஒருவருக்குத் தரமற்ற தூக்கத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் தூக்கச் சுற்றுக்கள் குழப்பமடைவதால் ஒவ்வொருவரும் அவர்களது தனிப்பட்ட வாழ்வில், பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. குறட்டைதான் மூச்சுவிட மறுத்தல் என்னும் நோய்க்கு மூல காரணம் ஆகிறது. அதாவது, மூச்சுவிடுதல் எனும் ஒழுங்கான அனிச்சைச் செயலில் தடை ஏற்படும் போது, இடையிடையே ஒன்றிரண்டு மூச்சு வெளிவராமலே தடையாகின்றது. இதனால் அவர்களின் குருதியில் போதியளவு பிராணவாயுவைப் (ஒட்சிசன்) பெற முடியாத ஆபத்துக்கு அவர்கள் உள்ளாகின்றனர்.

கீழ்க்குறிப்பிட்ட வகையினர் கூடுதலாகக் குறட்டை விடுவதாக அவதானிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கட்டையான கழுத்துடையோர், சிறிய நாடி மற்றும் தொங்கும் கீழ்த்தாடை உடையோர், அதீத எடை உடையவர்கள், கொழுத்த கழுத்து உடையவர்கள், சில வகையான ஒவ்வாமை உடையோர்கள், பிறவிக் குறைபாடுகள் உடையவர்கள், மூக்குத் தண்டுச் சுவர் வளைந்திருப்பவர்கள், சுவாச வழி மூக்குப் பகுதியில் நீர்க் கட்டிகள் அல்லது நீர்ச்சதைகள் (Polyps) இருந்தால், கடுமையான தடிமல் மூக்கடைப்பு இருப்பவர்கள், குழந்தைகள், சிறுவர்களில் டொன்சில் வீக்கம், அடினேயிட் வீக்கம் உடையவர்கள், அண்ணச்சதை வளர்ந்திருத்தல் மற்றும் புகைப் பிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள், தூக்க மாத்திரை பாவிப்பவர்கள், தைரொயிட் சுரப்பி நோய்க்குறைபாடு உடை யவர்கள், வாயினால் மூச்சுவிடுபவர்கள், அண்ணச்சதை தடித்திருப்பவர்கள், மார்பு நோய்கள் ஏற்பட்டுச் சளிகூடுதலாக உள்ளவர்கள் போன்றவர்களாவர். இப்படியானவர்கள் குறட்டை ஒலியை ஏற்படுத்தியபடி உறங்குவார்கள். எமது நலமான வாழ்வுக்குக் குறட்டையை எம்மிடம் இருந்து பிரிப்பதற்கு நாம் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவையாவன:

1. அதீத நிறையுடையோர், கொழுப்புடையோர் தங்கள் உடல் நிறையைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.
2. தினமும் காலையிலும், மாலையிலும் உடற்பயிற்சி செய்தல்.
3. மூச்சுப் பயிற்சியைத் தினமும் அரை மணித்தியாலயத்துக்கு மேலாகச் செய்து வரல் வேண்டும். உதாரணமாக: பலூன் ஊதுதல், புல்லாங்குழல் ஊதுதல், ஸ்பைரோமீற்றர் கருவியால் மூச்சுப் பயிற்சி செய்தல் மற்றும் யோகா மூச்சுப் பயிற்சி செய்தல்.
4. தூங்கும்போது உயரமான தலையணை வைத்தலைத் தவிர்த்தல் அதாவது 4 அங்குல உயரம் இருந்தால் போதுமானது.
5. சாப்பிட்டவுடன் படுக்கைக்குச் செல்லக் கூடாது.
6. புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்கள் அதைத் தவிர்த்தல் வேண்டும். முக்கியமாக மாலையிலும், இரவிலும் மது அருந்துதலைத் தவிர்த்தல் வேண்டும்.
7. மது அருந்தும் பழக்கம் உடையவர்கள் அதனைக் குறைத்தல் வேண்டும்.
8. வாயால் மூச்சுவிடும் பழக்கம் உடையவர்கள் அதனைமாற்றி மூக்கால் மூச்சுவிடும் பழக்கத்தை உருவாக்கல் வேண்டும்.
9. அதீத பருமன் உடையவர்கள் பக்கவாட்டில் படுக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
அவர்களின் முதுகுப் பகுதிக்குள் தலையணை வைத்தல், அல்லது சிறிய அண்டும் பொருள்களை முதுகுப் பக்க உடையுள் வைத்து, தைத்து விடுவதன் மூலம் மல்லாந்து படுப்பதைக் குறைக்கலாம்.
10. பற்களுக்கு இடையில் இடைவெளிகள் இருப்பின் பல்வைத்திய நிபுணரிடம் காட்டுதல்.
11. காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகள் குறைபாடுகள், அங்கவீனங்கள், சில சதை வளர்ச்சிகள், கட்டிகள் இருப்பின் காது மூக்கு தொண்டை (ENT) வைத்திய நிபுணரிடம், ஆலோசனை பெறுதல் மற்றும் சத்திரசிகிச்சைகள் செய்வதன் மூலம் இந்தக் குறைபாடுகளைத் தீர்க்கலாம்.
12. தூக்கத்துக்காக வைத்திய ஆலோசனை இன்றி, தூக்கமாத்திரை போடும் பழக்கத்தைத் தவிர்த்தல்.
13. மூளையின் செயற்பாடுகளின் மாற்றங்கள், பாதிப்புக்கள், வலிப்பு நோய் உடையவர்கள் அதற்குரிய சிகிச்சையை ஒழுங்காகப் பெறுவதன் மூலமும் குறட்டையைக் குறைக்கலாம்.
14. இரவு உணவு அதிகளவு எடுத்தலைத் தவிர்த்தல் நன்று. மிதமான காரமற்ற, எண்ணெய் அற்ற உணவு சிறப்பானது.

இவைபோன்ற நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், குறட்டையைக் குறைத்துச் சுகமாக ஆரோக்கியமான வாழ்வு வாழலாம்.

**ச.சுதாகரன்,**
**தாதிய உத்தியோகத்தர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 நூற்றாண்டுகளாக கத்தோலிக்க விசுவாசத்துக்கு சான்று பகரும் சில்லாலை கதிரைமாதா ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

இலங்கையின்முதல்புனிதர்யோசவ் வாஸ் அடிகளாரை பாதுகாத்த சின்ன உரோமை என அழைக்கப் படும் சில்லாலை கதிரை மாதா ஆலய பெருவிழா ஆவணி மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை 400 ஆண்டுகால விசுவாச வாழ்வு வாழ்ந்த சில்லாலைக் கிராமம் ஒரு வேளாண்மைக் கிராமம் ஆகும். மா – பலா – வாழை என்ற முக்கனிகளும் தென்னை – கமுகு – பனை என்ற வானுயர் மரங்களும் செழித்து வளர்ந்த சோலையான சில்லாலையின் குளிர்மைக்கு வரிவரியாய் அமைந்து பச்சைப் பசேலெனக் காட்சிதரும் வெற்றி லைக் கொழுந்துத் தோட்டங்கள் மேலும் குளிரூட்டுகின்றன.



யாழ்ப்பாண மாவட்டத்தில் காரசாரமான வெற்றிலைக்கு பெயர் போன ஊராக சில் லாலை விளங்கியுள்ளது – சில்லாலை வெற் றிலையும் – சிறுவிளான் சுண்ணாம்பும் – சுன் ணாகப் பாக்கும் – சுதுமலையின் புகையிலை யும் என்பது வெற்றிலையின் சிறப்பை தொடர்புபடுத்திப் பாடப்படும் பாடலாகும்.

கதிரைச்செல்வியே எம் ஊர் இன்பத்தாய் நீயே உம்மையே நம்பி இன்னிலம் வாழும் உம் மக்கள் பாராயோ – சீரிய கதிரைச் செல்வியே – என்று நம்பிக்கையோடு பங்கு மக்களுக்காக தினமும் பாடும் சில்லாலை கதிரைமாதா ஆலயப் பங்கு மக்கள் – வாழை கமுகு பல சோலையே – இவற்றை வளர்ப்பது உன் செபமாலையே – எனத் தம் பயிர்களுக் காகவும் கதிரைத்தாயிடம் வேண்டி வந்துள்ளனர்.

சின்ன உரோமை என அழைக்கப்படும் சில்லாலைப் பங்கில் அமைந்துள்ள கதிரை





மாதா ஆலயம் இலங்கையில் உள்ள ஒரே யொரு ஆலயமாகும். இந்தப் பெயரில் இலங்கையில் வேறெங்கும் ஆலயங்கள் இல்லை. இங்கிலாந்தில் வோல்சிங்கம் நகர் யாத்திரைத்தலத்தில் சில்லாலையில் உள்ள சொரூபம் போல் கதிரையில் அமர்ந்த அன் னையினுடைய சொரூபமே அமைந்துள்ளது. சில்லாலை மண்ணின் மைந்தரான டாக்டர் அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தை மனதில் கொண் டவராக இங்கிலாந்தில் வாழும் சில்லாலை மக்களுக்கென கதிரையில் அமர்ந்த அன்னையின் வோல்சிங்கம் நகருக்கு ஒரு யாத்திரையை ஆரம்பித்தார். அது இன்று இங்கிலாந்தில் உள்ள தமிழர் களின் யாத்திரையாக ஆண்டுதோறும் நடை பெறுகிறது. வோல்சிங்கம் நகரில் இருக் கின்ற கதிரைமாதாவிற்கும் சில்லாலை யில் இருக்கின்ற கதிரைமாதாவிற்கும் இடையில் தொடர்பு ஏதும் இருக்குமோ என்று ஆய்ந்த போது எவ்விதமான தொடர்பையும் காணமுடியவில்லை.

இக்கட்டுரைக்கான தகவல்கள் சில்லாலை மண்ணின் மைந்தனும் நிரந்தர மறை ஆசிரியருமான எஸ்.ஏ.நாதர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு வெளியிட்ட – சில்லாலை கதிரைச்செல்வியின் பொன்விழா சிறப்பு வெளியீடு (1957 – 2007) – என்ற நூலில் இருந்தும் சில்லாலைப் பங்குத்தந்தை எமில் போல் அடிகளார் வழங் கிய நேரடித் தகவலில் இருந்தும் பெறப்பட்டன.

டச்சுக்காரர் காலத்தில் கருப்பம் சீனி செய்யும் கரும்பு நெரிக்கும் சிறிய ஆலைகள் சில்லாலை யில் இருந்ததாகவும் – சிறிய ஆலை என்பதே கால ஓட்டத்தில்மருவிசில்லாலைஎனதோற்றம் பெற்றதாகவும் ஒரு வாய்வழிப் பாரம்பரியம் உண்டு.

இங்குள்ள பெருமளவிலான விவசாயக் காணிகளின் கிணற்றில் சில்லுப் பூட்டிய சுழல் சக்கரத்தில் நீர் இறைக்கும் வாளிகள் பொருத் தப்பட்டு சக்கரத்தைச் சுற்றும் போது வெற்று வாளிகள் கிணற் றுக்குள் சென்று நீரை அள்ளி மேலே கொண்டுவரும் (சூத்திர வாளி) அமைப்புடைய நீர் ஆலை கள் இருந்தமையால் – சில்லுகள் பூட் டப்பட்ட ஆலை என்ற பெயர் சில் லாலை என பெயர் பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படு கிறது. (ஈழத்து இடப்பெயர்வு ஆய்வு – யாழ்ப்பாண மாவட்டம் – கலாநிதி இ.பாலசுந்தரம் – பக் கம் 206)

போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னரே இலைமறை காயாக சில்லாலையில் கத்தோலிக்கம் இருந்தது என்பதை உறுதிப்படுத்த போதிய சான்றுகள் இல்லை. இருப்பினும் போர்த்துக்கேய ரால் யாழ் நல்லூர்ப்பகுதியில் கிறிஸ்தவம் வைத்தியர் பரம் பரையில் பரப்பப்பட்டது என்று அறியவருகின்றது. சங்கிலி அர சன் இவர்களை கொன்றொ ழிக்க கிளர்ந்தபோது இரவோடு இரவாக தப்பி யோடி சில்லாலையில் புக லிடம் பெற்ற இரண்டு கத்தோலிக்க வைத்திய குடும் பங்களே சில்லாலை கத் தோலிக்க பாரம் பரியத்தின் அடித் தூண்கள் ஆகின்றனர். இவர்களால் கட்டியெழுப்பட்டதே சில்லா லைக் கத்தோலிக்க கிராமம் ஆகும்.

1544 இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத் தில் தங்கியிருந்த போது ஆங்காங்கு பல கற் கோவில்களைக் கட்டினர். பண்டத்தரிப்பில் இன்று தென்னிந்தியச் திருச்சபைக் கோவில் இருக்கும் இடத்தில் ஆரோக்கிய மாதாவிற்கு ஒரு கோவில் அமைக்கப்பட்டிருந்தது. அக் கோவிலில் போர்த்துக்கேயரால் மிகுந்த வணக்கத்துடன் வழிபட்டு வந்த ஆரோக்கிய அன்னையின் திருச்சொரூபம் கதிரையில் அமர்ந்து இயேசு பாலனை மடியில் வைத்தி ருக்கும் பா[illegible] கதிரைத்தாய் [illegible] ஒல்லாந்தர் நாட்டைக் கைப்பற்றிய போது சில்லாலைக் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி இந்தச் சொரூபத்தை இரவோடு இரவாக எடுத்து வந்து சில்லாலையில் மண்ணால் கட்டப்பட்ட ஆலயத்தில் வைத்து வணங்கி வந்துள்ளனர். 1641 ஆம் ஆண்டில் சில்லா லைக் கிராமத்தில் 395 கத்தோலிக்கர்கள் வாழ்ந்ததாக போர்த்துக்கேயரின் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யோசவ்வாஸ் அடிகளார் தமது பணிக் காலத்தில் (1687 – 1711) மூன்று ஆண்டுகள் தமது இருப்பிடத்தை சில்லாலையில் அமைத் துக்கொண்டார் எனக்கூறப்படுகிறது.

மூதாதையரான காயர் பிரான்சிஸ்பிள்ளை வேத விதிகளை மதிக்காது – ஞாயிறு திருப் பலி செல்லாது – வீட்டை ஓலையால் மேய்ந்து கொண்டிருந்த போது வீட்டு வேலையை விட்டு பூசைக்கு வருமாறு யோசவ்வாஸ் அடிகளார் ஆள் அனுப்பியும் அவர் செவி சாய்க்காமையால் காயர் வீடு தீப்பற்றி எரியட்டும் என்று யோசவ்வாஸ் அடிகளார் கூற – வீடு தீப்பற்றி எரிந்தது.

தன் குற்றத்தையும் தண்டனையையும் உணர்ந்த காயர் ஓடிச்சென்று யோசவ்வாஸ் அடிக ளாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரி னார். யோசவ்வாஸ் அடிகளார் அவரை மன்னித்து தன்னிடமிருந்த சிலுவையைக் கழற்றி இச்சிலுவை உன்னிடம் உள்ளளவும் குறைவிலாச் சோறும் புத்திர பாக்கியமும் உண்டு என வழங்கியதாக அறியவருகின்றது. சிலுவையோடு பெரிய மட்பாண்டத்தையும் ஆசீர்வதித்து இக்கிராமத்தில் இறை அழைத் தல்களும் இசை ஆசீரும் என்றும் நிலைக்கும் எனக்கூறியுள்ளார் எனவும் தெரியவருகிறது. அந்த மட் பாண்டத்திற்கு என்ன நடந்தது என்பது தெரியாது. சில்லாலை பங்கு யோசவ்வாஸ் அடிகளரின் வாழ்த்துதலுடன் யாழ் மறைமாவட் டத்திலேயே அதிக தேவ அழைத்தல்களின் விளை நிலமாக விளங்கு கிறது. ஏறக்குறைய 37 குருக்களும் 43 கன்னியர்களும் இறை பணிக்கு தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

யோசவ்வாஸ் அடிகளாரால் 400 வருடங் களுக்கு முன்னர் வழங்கப்பட்ட திருச்சி லுவை காயர் குடும்ப இனத்தவராகிய மடுத் திருப்பதியில் பணியாற்றும் மரியநாயகம் மனோகரி குடும்பத்தின் பாதுகாப்பில் இன்றும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1687 ஆம் ஆண்டு யோசவ்வாஸ் அடிகளார் சில்லாலைக்கு வரும் போது கொலரா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். மூப்பனா ரின் மனைவி, அடிகளாரின் வருத்தத்தில் அவரைப் பராமரித்தார். குணமடைந்த பின் யோசவ்வாஸ் அடிகளார் ஆரோக்கிய மாதா என மாதாவைப் புகழ்ந்ததோடு அவரை மருந்து மாதா எனவும் அழைத்தார்.

யோசவ்வாஸ் அடிகளாரை வருத்தத்தில் பாதுகாத்து பராமரித்தமையால் சில்லாலை வைத்தியம் புகழ்பெற்று விளங்குகியது என ஊர் மக்கள் நம்புகின்றனர். – எல்லோரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம் – என்று கூறப்படுகின்ற வைத்தியம் சில்லாலை கதிரை மாதாவின் அருள் ஆசியே என்று கூறப்படு [illegible] சில்லாலை வைத்திய பாரம்பரிய [illegible] இன்று இல்லாமல் போய்விட்டமை வருத்தத்திற்குரியது.

9 தலைமுறைகளாக வைத்தியம் செய்துவந்த வைத்தியகலாநிதி அமரர் எஸ்.பி.இ.இன் னாசித்தம்பி – துணைவியார் வைத்தியாச் சாரி அமரர் திருமதி நீற்றா இன்னாசித்தம்பி – வைத்தியக்கலாநிதி அமரர் எஸ்.அத்தனாசி யார் பாக்கியநாதர் – சித்த வைத்தியர் கலாநிதி காலஞ்சென்ற யோசவ் அல்போன்ஸ் அத்த னாசியார் போன்றோர் இங்கு குறிப்பிடத் தக்கவர்கள். பரம்பரை வைத்தியர் இன்னாசித் தம்பியின் வீடு – தெய்வீக மருத்துவர் மட ஆலயம் இன்னாசித்தம்பி நிலையம் – என் னும் பெயரில் நற்கருணை நாதர் சபை யினருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1903 – 1906 காலப்பகுதியில் சில்லாலை மக்களுக்கான கல்லறைத் தோட்டம் அமைக் கப்பட்டது. அங்குள்ள சிற்றாலயத்தையும் சிறு மணிக்கோபுரத்தையும் ஆலய மூப்பர் இன்னாசித்தம்பி சூசைப்பிள்ளை அவர்கள் 1908 ஆம் ஆண்டில் அன்பளிப்பாக கட்டி வழங்கினார்.

1896 இலும் – 1916 இலும் இரு கட்டங்களாக ஆலயம் புனரமைக்கப்பட்டு சுண்ணக் கற் களால் சுவர் எழுப்பி ஓடுகளால் வேயப்பட்டு ஆலயத்தின் உள்ளே சிம்மாசனம் எழுப்பி அன்னையின் திருவுருவம் அமைக்கப்பட் டது. பெரிய உயர்ந்த சொரூபமாக சாதாரண நாற்காலியில் அமைந்திருப்பதாக காட்சிதந்த அன்னையை சிம்மாசனத்தில் அமர்த்த விரும்பிய வெந்தக்கோன் அமதி அடிகளார் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு பழைய நாற்காலிகளை அகற்றி புதிய சிம்மாசனத்தில் அமரக்கூடிய விதமாக அன்னையின் உரு வைக் குறைத்து அடக்கமாக வடிவமைத்தார் என்று கூறப்படுகின்றது. அன்னையின் பழைய படங்களில் இதனைக் காணலாம்.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த லூயிஸ் டெய்சி அமதி அடிகளார் இரண்டு தடவை களாக 15 ஆண்டுகள் சில்லாலைப் பங்கில் பணியாற்றியுள்ளார். முதலாவது பணிக் காலத்தில் ஆலய வளாகத்தில் வலப் பக்கத்தில் பெண்கள் பாடசாலையையும் – இடப்பக்கத் தில் ஆண்கள் பாடசாலையையும் நிறுவி னார். சில்லாலையின் தெற்குப் பகுதியில் சந்தியோகுமையோர் என அழைக்கப்படும் யாகப்பர் ஆலயத்தை இவரே கட்டியெழுப் பினார். இரண்டாவது பணிக்காலத்தில் (1951 – 1961) கதிரை மாதா ஆலயத்தை தூண் களின் துணையின்றி வானவில் வடிவில் தாங்கிநிற்கும் இன்றைய கோவிலை 1957 இல் தொடக்கி 1961 இல் கட்டிமுடித்து அப் போதைய யாழ் ஆயர் ஜெ.எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையால் திறந்துவைத்தார்.

இராஜரட்ணம் ஜ.வி.டி அடிகளாரின் காலத் தில் (1976 – 1979) 1978 ஆம் ஆண்டு ஆல யத்தின் இரு கோபுரங்களும் கட்டிமுடிக்கப் பட்டு ஈசபெல் சுவாம்பிள்ளை என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரு பாரிய மணிகளும் பொருத்தப்பட்டன.

யோசவ்வாஸ் அடிகளாரின் பணியினை நினைவுகூரும் விதமாக அவர் நாற்சதுரக் கட்டடம் அமைத்து பணியாற்றியதாக சொல் லப்படும் இடத்தில் (முன்னர் திருக்குடும்பக் கன்னியர்களின் மடம் அமைந்திருந்த இடம்) யோசவ்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300 ஆவது ஆண்டு நினைவாக அருளாளர் யோசஸ்வாஸ் நினைவாலயம் எஸ்.நேசநாயகம் அடிகளாரின் பணிக்காலத் தில் (2010 – 2014) யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் 16–01–2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

யோசஸ்வாஸ் அடிகளார் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட தினத்தில் அவரின் வாழ்வும் பணியும் பற்றிய கண்காட்சி மறையாசி ரியர்களின் முழுப்பங்களிப்புடன் எமில் போல் அடிகளாரின் பணிக்காலத்தில் (2014 முதல் இன்றுவரை) 06–12–2014 இல் டெய்சி மண்டபத்தில் நடைபெற்றது. 25–01–2015 அன்று புனித யோசஸ்வாஸ் அடிகளாரின் முதல் திருவிழா கொண்டாடப்பட்டது. கதிரையில் அமர்ந்து அருள் மழை பொழியும் கதிரைச் செல்வி உலகெங் கும் பரந்து வாழும் சில்லையூர் மக்களுக்கு அருளும் பாது காப்பும் வழங்குவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் என்றும்

காப்புறுதித் துறையின் அதிபதி

காப்புறுதியின் அரசன்

SRI LANKA INSURANCE CORP. LTD.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

எட்டாத உயரத்தில் நிலைத்திடக் காரணம்

ரூ.74 பில்லியன் ஈடில்லா ஆயுள் நிதி

ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு கடந்த 10 வருடத்தில்
ரூ.30 பில்லியனுக்கும் மேற்பட்ட பாரிய இலாபப்பங்கு

2014 எம் தேசத்தின் சிறார்களுக்காக
ரூ.18 மில்லியனுக்கும் மேற்பட்ட
நிதி உதவிப் புலமைப்பரிசில்கள்

ரூ.161 பில்லியன் இணையற்ற சொத்து மதிப்பு

இலங்கை காப்புறுதித்துறையில் வேறு எவருக்கும்
இல்லாத 53 வருட அனுபவம்.
நம்பிக்கை எனும் சிகரத்தில் அரை நூற்றாண்டுகளாக
நிலைத்திருக்கும் ஒரே அரச காப்புறுதியாளன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chevron

CALTEX

# எங்கள் முன்வரிசையாளர்கள் ஒப்பிடுவதற்கு அப்பாலான நன்மைகளினால் வலுவூட்டப்பட்டுள்ளனர்

ஐக்கிய அமெரிக்க நாட்டின் செவ்ரோன் கூட்டுத்தாபனத்தின் 51% பங்குகளைக் கொண்ட முன்னணி கம்பனி, ஆகும் வருடாந்தம் இலங்கை ரூபா 2.5 பில்லியன் வருமானத்தை ஈட்டும் உள்நாட்டு உராய்வு நீக்கிக் கைத்தொழில்துறைச் சந்தையில் முதன்மையான கம்பனி, பிரித்தானிய நியமத் தரத்திற்கான நிறுவனச் சான்றிதழைக் கொண்ட களஞ்சியசாலை வசதியுடன் கலத்தல் மற்றும் நிரப்புதலைக் கொண்ட சமகால வசதிகளுடனான பொறுத்தொகுதி மற்றும் ஏற்றுமதிச் சந்தையாளர் உங்களுக்கு உலகளாவிய வலுச்சக்தி கம்பனியுடன் இணைந்து வளர்வதற்கான சந்தர்ப்பத்தை கீழ்வரும் வசதிகளை உள்ளடக்கிய கவர்ச்சியான ஊதியப் பொதியொன்றுடன் உங்களுக்கு வழங்குகின்றது.

- கம்பனியால் பராமரிக்கப்படும் கார்
- வருடத்திற்கு கம்பனியால் வரி செலுத்தப்படும் உத்தரவாதப்படுத்தப்பட்ட மூன்று மாத மிகை ஊதியம்
- வருடாந்த செயற்பாட்டுக்கு அமைவாக மாறுபடும் மிகையூதியம்

## விற்பனைப் பிரதிநிதிகளுக்கான (வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்கள்) வெற்றிடங்கள்

ஒரு விற்பனைப் பிரதிநிதியாக நீங்கள் விநியோக விற்பனைப் பிரதிநிதிகளின் குழுவை மேற்பார்வை செய்தல், விற்பனை விநியோகத்தை முகாமைத்துவம் செய்தல், எங்கள், ஊடக பங்காளர்களுடன் பணியாற்றுதல் மற்றும் உடன்பட்ட செயற்பாட்டு இலக்குகளை அடைவதற்கான முழுமையான பொறுப்பை வைத்திருத்தல் என்பவற்றைக் கையாளுதல் வேண்டும்.

உங்கள் இத் தொழில் சார் கருமமானது எப்போதும் மாறும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு விளம்பரப்படுத்தல் மற்றும் அவற்றை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதுடன் உங்கள் அறிவையும் அனுபவத்தையும் தொடர்ச்சியாக மேம்படுத்தலையும் உள்ளடக்கியிருக்கும்.

### அவசியமானவை:

வெற்றிகரமான விண்ணப்பதாரர் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தின் விற்பனை தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதனால், மன்னார், வவுனியா அல்லது திருகோணமலையை தளமாக கொண்டிருத்தல் வேண்டும். சிங்கள மொழியில் தொழில்புரிவதற்கான அடிப்படை அறிவுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சிறந்த புலமையைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

விண்ணப்பதாரர் 30 வயதிற்கு குறைவாக இருப்பதுடன், சிறந்த ஆளுமை மற்றும் தன்வசப்படுத்தக் கூடிய திறனையும் கொண்டிருத்தல் வேண்டும். பிரபல்யமான FMCG கம்பனியில் விற்பனைப் பிரிவில் 2 -3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

நீங்கள் மேற்பட்ட தகைமைகளைக் கொண்டிருப்பின் தயவுசெய்து எங்கள் www.chevron.lk இணையத்தளத்தின் தொழில் பிரிவுக்கு வருகை தந்து, இந்த விளம்பரத் திகதியில் இருந்து 7 நாட்களுக்குள் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். குறும்பட்டியல் தயாரிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே அறிவித்தல் வழங்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்க.

மனிதவள அபிவிருத்தி முகாமையாளர்
**செவ்ரோன் லூப்ரிகன்ஸ் லங்கா பிஎல்சி**
'செவ்ரோன் ஹவுஸ்'
இல.490, காலி வீதி, கொழும்பு 03

இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிப்பதற்கு www.chevron.lk தளத்திற்கு வருகை தரவும்.

# ஆசியாவில் மிக நம்பகமான வர்த்தக நாமமாக டி.எச்.எல்.

உலகின் முன்னணி அதிவேக சரக்கியல் சேவை வழங்குநரான டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் நிறுவனம் மிகவும் உயரிய நிகழ்வாக கருதப்படும் 2015 ரீடர்ஸ் டிஜெஸ்ட் நம்பகமான விருதுகள் வழங்கும் நிகழ்வில் தொடர்ந்து 7ஆவது ஆண்டாக ஆசியாவின் விமான சரக்கு கூரியர் சேவை பிரிவில் நம்பிக் கைக்குரிய வர்த்தகநாமம் எனும் விருதை வென்றுள்ளது.

டி.எச்.எல். நிறுவனம் முதல் முறையாக 2014இல் தாய்வான் நகரில் தங்க விருதை வென்றெடுத்ததுடன்.குறிப்பாக ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் தாய்வான்போன்ற நகரங்களில் பிளாட்டினம் விருதுகளை வென்று அதன் சந்தை தலைமைத்துவஸ்தானத்தை விஸ்தரித்திருந்தது.

டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் மலேசியா மற்றுமொரு "தங்க விருதுடன் அதன் சந்தை தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொண்டதுடன், முதல் முறையாக வாசகர்கள் மூலம் வாக்களிப்பட்டு தங்க விருதை டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் பிலிப்பைன்ஸ் உம் தனதாக்கிக் கொண்டது.

17ஆவது வருடமாக முன்னெடுக்கப்படும் ரீடர்ஸ் டிஜெஸ்ட் விருதுகள் என்பது சுமார் ஆசியாவைச் சேர்ந்த ஹொங்கொங், இந்தியா, மலேசியா, பிலின் பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற ஏழு சந்தைகளிலிருந்து கிடைத்த சுமார் 5000 வாசகர்களை உள்ளடக்கிய ஆய்வுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது.

விமான சரக்கு/கூரியர் சேவை பிரிவில் நம்பகமான வர்த்தகநாம விருதுகளை கொண்ட அனைத்து சந்தைகளிலும் டி.எச்.எல். உயர் தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் ஆசிய பசுபிக் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜெரி சூ கருத்து தெரிவிக்கையில், ஒவ்வொரு நிறுவனமும் சிறந்த ஓர் ஆண்டினை பெற முடியும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் நிலையான சிறந்த சேவையை வழங்குவதே வாடிக்கையாளர்களின் நம்பகத்தன் மையை பெறுவதற்கான முறையாகும்.

நம்பிக்கை என்பது எமது வர்த்தகநாமத்தின் இதயமாக அமைந்துள்ளதுடன், 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசியாவில் டி.எச்.எல். அதன் நம்பிக்கையை கட்டியெழுப்பிக் கொண்டுள்ளது.

Readers Digest நம்பகமான வர்த்தகநாமம் விருதுகள் போன்ற மரியாதைக்குரிய திட்டங்கள் மிக உயர்ந்த அளவு கோளினை அமைக்க எம்மை ஊக்குவித்துள்ளது. கடந்தாண்டு குறிப்பாக தாய்வான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் எமது செயற்றிறனை மேம்படுத்தியதையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன் என்றார்.





தற்போது நாம் கரியமில வாயு வெளியேற்றத்தை இல்லாதொழிக்கும் வகையிலும், செயற்பாட்டு செயற்திறனை மேம்படுத்தும் வகையிலும் புதிய எரிபொருள் திறன் மிக்க வாகனங்கள் மீது முதலீடு செய்து வருகிறோம்.

எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு எமது சேவை வழங்கலை தொடர்ச்சியாக விஸ்தரித்து வருவதுடன், ஆசிய, அமெரிக்க மற்றும் உள்ளக ஆசியா என்பவற்றுக் கிடையே திறன் சேர்த்து வருகின்றோம்.

டி.எச்.எல். ஆகிய நாம் வெற் றியை பெறுவதற்கு வாடிக்கை யாளர் திருப்தி, புத்துருவாக்க தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் சிறந்த சேவை வழங்கல் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்பதை அறிந்துள்ளோம் என மேலும் அவர் தெரிவித்தார். அதிகப்படியான புள்ளிகளினால் அதன் மிக நெருங்கிய போட்டி நிறுவனங் களை பின்தள்ளி விட்டு, ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் தாய்வான் போன்ற நாடுகளில் உள்ள டி.எச்.எல். நிறுவனம் பிளாட்டினம் விருதை வென்றெடுத்தது. மலேசியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளில் தங்க தரத்தினை பெறுவதற்கு டி.எச்.எல் நிறுவனம் அதன் பிரிவுகளில் தெளிவான சந்தை தலைமையை கொண்டிருத்தல் வேண்டும். மிகவும் பெருமைக்குரிய ஒட்டுமொத்த ஆசியாவின் மிக நம்பகமான வர்த்தகநாம விருதினை பெறுவதற்கு மூன்று சந்தைகளில் முன்னோடியாக இருக்க வேண்டும். 2015ஆம் ஆண்டில் டி.எச்.எல் நிறுவனம் அதன் தலைமைத்துவத்தை நான்கிலிருந்து ஐந்து சந்தைகளுக்கு விஸ்தரித்திருந்தது.

கடந்த 2014ஆம் ஆண்டில் டி.எச்.எல் ஆனது இலத்திரனியல் மற்றும் பற்றரி செயல்பாடு உள்ளடங்கலாக மிகவும் எரிபொருள் சிக்கனம் மிக்க எஞ்சின்கள் கொண்ட புதிய வாகனங்கள் மீது முதலீடு செய்திருந்தது.

செயற்திறன் மிக்க தரை நடவடிக்கைகள், வலு செயற்திறன் மிக்க கட்டடங்கள், சிறந்த காலநிலை கட்டுப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் புதிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானம் போன்றவற்றின் ஊடாக பிராந்தியத்தில் வலுசெயற்றிறன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.



ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலிருந்து பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3625232
மாகாணம் - 076 6773659, உடனடி தொடர்புகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நயினாதீவு செம்மண ்த்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆ ்யத்தின் வருடாந்தத் திருவிழாவி் ா போது இடம் பெற்ற சப்பறத்திருவிழாக் காட்சியையும்,நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடனக்காட்சிகளையும் காணலாம்.(ஐ)



யாழ்ப்பாணத்தில் பெரியளவில் தயாரிக்கப்பட்டு வரும் நண்பி எனும் குறுந்திரைப் படத்தின் முன்னோட்டம் சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)





சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் நிறுவுனர் தினமும், வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் பாடசாலையின் அதிபர் நா.ஜெயராணி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)





காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மகா வித்தியாலயத்தின் உலக சுற்றாடல் தின நிகழ்வுகள் பாடசாலை அதிபர் திருமதி.வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதைக் காணலாம். (ஐ)



அட்சரம் பவுண்டேசனால் ராஜா ஸ்ரீகாந்தன் ஞாபகார்த்த குறும்படப்போட்டியில் விமல்ராஜின் வெள்ளம் குறுந்திரைப் படத்துக்கு விருது கிடைக்கப்பெற்றது. இதன் ஒளிப்பதிவாளர் விமல்ராஜ், குழந்தை நட்சத்திரம் ஜனுசன் ஆகியோர் விருதைப் பெற்றுக் கொண்டனர். (ஐ)



அனலைதீவு ஐயனார் ஆலயப் பெருந் திருவிழாவின் போது இடம் பெற்ற சப்பறத் திருவிழாவின் காட்சிகள். (ஐ-9)



மக்கள் வங்கியின் 54 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பசுமை வங்கி முறை நாடளவிய ரீதியில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. சங்கானை மக்கள் வங்கியினால் சுழிபுரம் வழக்கம்பரை ஆலய வளாகத்தில் வங்கி முகாமையாளரால் மரம் நாட்டும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ)





தமிழர் தம் பண்டிகை நிகழ்வுகளில் ஒன்றான ஆடிப் பிறப்பு நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. (ஐ-10)





சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சு.இராசரத்தினத்தின் 131ஆவது பிறந்த நாள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத்தூதர் ஆ.நடராஜன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலைய முன்னை நாள் பொதுச்செயலாளர் அமரர் வை. கந்தசாமி ஞாபகார்த்த விளையாட்டு நிகழ்வும் ஆடிபிறப்பு விழாவும் கடந்த 17 ஆம் திகதி சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் மு.விமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனையும், முதன்மை விருந்தினரான இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர் வே. பாலகிருஸ்ணன் மங்கல விளக்கேற்றுவதையும், இறைவணக்கம் செய்வதையும், பாரம்பரிய விளையாட்டுக்களான கிறீஸ் கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், தேங்காய் துருவுதல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல், ஊசிநூல் கோர்த்தல் மற்றும் பொதுஅறிவு போட்டிகளிலும், விளையாட்டுகளிலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதையும் மற்றும் இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதி மக்களையும் படத்தில் காணலாம்.



இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தினால் உயர்த்தும் கரங்கள் செயற்திட்டத்தில், முல்லைத்தீவு பிரதேசத்தில் தாய் அல்லது தந்தையை இழந்த வெவ்வேறு குடும்பங்களை சேர்ந்த தேவை உடைய மாணவர்கள் நால்வருக்கு மாதந்தம் 2 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டன.(ஐ)



தோணிக்கல் சிவாலயா முன்பள்ளிக்கு வடக்குமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவினால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.



வட்டுக்கோட்டை பிலவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் சரஸ்வதி திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. தமது துணைவியின் ஞாபகார்த்தமாக வெ.ரகுநாதன் சிலைக்கான நிதியுதவியை வழங்கியிருந்தார். பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் சிலை வடிவமைக்க நிதி உதவிய குடும்பத்தினர், வடிவமைத்த சிற்பி ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் -2015-





## தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரித்து

# மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

- இடம் : மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம்
- காலம் : 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி
- தலைமை : அ.ஜெபநேசன் (முன்னாள் தவிசாளர் - மானிப்பாய் பிரதேச சபை)
- சிறப்புரை : உயர்திரு. இரா.சம்பந்தன் (தலைவர்- தமிழ்த் தேசிய கூட்டமைப்பு)

### பரப்புரையாளர்கள்



திரு.மாவை சோ. சேனாதிராஜா
(முதன்மை வேட்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.ஈ.சரவணபவன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.த. சித்தார்த்தன்
(மாகாணசபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.ம.ஆ. சுமந்திரன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.சி.சிறிதரன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.க.அருந்தவபாலன்
(அதிபர்,டிறிபேக் கல்லூரி)

திரு.ந. ஸ்ரீகாந்தா
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.ந.அனந்தராஜ்
(முன்னாள் தவிசாளர், நகரசபை வல்வெட்டித்துறை)

திருமதி மதினி நெல்சன்
(முன்னாள் நகரசபை உறுப்பினர்,பருத்தித்துறை)



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேசசபை தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கலந்து சிறப்புரை ஆற்றுவார்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**அனைவரும் வாருங்கள்!**
**கேளுங்கள்!**
**சிந்தியுங்கள்!**
**வாக்களியுங்கள்!**

(இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மானிப்பாய் தொகுதி மக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2015

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

# தமிழர் விடுதலைக் கூட்டணியை

உருவாக்கிய உத்தமர்களான








அ. அமிர்தலிங்கம் | ஜி.ஜி.பொன்னம்பலம் | தந்தை செல்வா | சௌ. தொண்டமான் | மு. சிவசிதம்பரம்

**இவர்களின் இலட்சியப் பாதையில்**



## முதன்மை வேட்பாளர்

# இ. த. விக்னராசா

## (ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி)

**என் அருமை வாக்காளப் பெரு மக்களே!**

தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீதியையும், அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செயற்பட்டு பெற்றுத் தரக்கூடியவர்களே, இன்றைய காலத்தின் தேவை என்பதனை நன்கு உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் ஒன்று திரண்டு ஆவணி 17ஆம் திகதிய பாரளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக என்னை ஏகமனதாக நியமித்துள்ளனர்.

அண்ணன் அமிர்தலிங்கத்துடன் அன்று வாலிபனாக வட்டுக்கோட்டைத் தொகுதி பூராகவும் மக்களை அவர்தம் வதிவிடங்களுக்கு நேரில் சென்று சந்தித்து உரையாடியது போல உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் வந்து சந்தித்து உரையாடி, நேர்மையான, மக்கள் பற்றுள்ள ஒரு புதிய தமிழ்த் தேசியத்துக்கு அர்ப்பணிப்புடன் ஆழமாக வடிவமைக்கப்பட்ட வல்லவர்களை அடையாளம் கண்டு பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்ற உண்மைகளை தெளிவுபடுத்தி, உங்கள் உள்ளத்தில் நம்பிக்கை ஒளிக்கீற்றை உருவாக்க வேண்டுமென்ற எனது இதயபூர்வமான ஆதங்கத்தை செயல் வடிவம் கொடுக்க தற்போதைய தேர்தல்கள் சட்டம் இடமளிக்காமையால் இம் மடலை வரைகிறேன்.

முதற்கண், கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, புளொட் ஆகிய அரசியல் கட்சிகள் ஓரணியாகத் திரண்டு தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரம் விருப்பு வாக்குகளை தமிழ் பேசும் மக்கள் வழங்கி அடையாளம் காட்டி முதலமைச்சராக தெரிவான நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஆவணி மாதம் 17ஆம் திகதிய பாராளுமன்ற தேர்தலில் அரசியல் நேர்மையுள்ள, நீதியான, சலுகைகளுக்கு விலை போகாத மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடியவர்களை உங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டுமென விடுத்த வேண்டுகோள் இலட்சியப் பற்றுள்ள இனிய தமிழ் பேசும் மக்களுடைய சிந்தனைக்குரியதாகும் எனக் கருதுகிறேன்.

ஏனெனில், வட மாகாண சபைத் தேர்தலில் ஓரணியாகத் திரண்டு நின்ற தமிழ் அரசியல் கட்சிகள் பாரளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவும் தமிழ் பேசும் மக்கள் முன் நிற்பதனால் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை மாத்திரம் ஆதரிக்காது ஓர் நடுநிலைமையுடன் மக்களை சரியான வழியில் வழி நடத்தும் பொருட்டு உரிமைகளையும், நீதியையும் தூரநோக்குப் பார்வையில் அர்ப்பணிப்புடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்கக்கூடிய சலுகைகளுக்கு விலை போகாத பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் என எண்ணுகிறேன்.

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களின் நடுநிலைமை பாத்திரத்துக்கு வலுவூட்டும் வகையில் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக எல்லா நேரங்களிலும் குரல் கொடுத்து, எந்த வேளையிலும் துணிவுடனும் உண்மையான அர்ப்பணிப்புடனும் செயற்படும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை சார்பாக பாரளுமன்றத் தேர்தல் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலும், மக்களை சரியான வழியில் வழிநடத்தும் பொருட்டு தமிழ்த் தேசிய நலன்களை முன்நிறுத்தக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு அறைகூவல் விடுத்திருப்பதும் தமிழ் பேசும் மக்களை நிதானமாகச் சிந்தித்து வாக்களிக்கும் உரிமையை தவறாது பயன்படுத்த தூண்டுகோலாக அமைந்துள்ளது.

1961ஆம் ஆண்டு மாசி மாதம் 20ஆம் திகதி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்த இலங்கை அரசுக்கெதிராக யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வாவினால், ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் விஸ்வரூபம் எடுத்து தபால் சேவை நடாத்த எடுத்த முடிவுக்கமைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்னும் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி பாரளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்கள் போராட்டத்தில் இணைந்து முதலாவது கடிதத்தை அரசாங்க அதிபருக்கு விநியோகித்து தமிழ்த் தேசியத்திற்கு வலுவூட்டினார். ஆகவே, 1960ஆம் ஆண்டிலேயே என் இனிய தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை முன்நிறுத்தக் கூடியவர்களையே தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்தனர் என்பது மறத் தமிழர் வரலாறாகும்.

ஆகவே, நேர்மையான அரசியலில் அர்ப்பணிப்புடன் தமிழ்ப் பேசும் மக்களின் தனித்துவத்தில் உறுதியுடன் தூர நோக்குப் பார்வையில் மக்களுடைய துன்ப துயரங்களை மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அனுபவித்தவன் என்ற வகையிலும், பிறந்தது முதல் இன்று வரை, கொடூரமான யுத்த நிலைமைகளிலும் இம் மண்ணை விட்டுச் செல்லாமல் பின்வரும் வகையிலும் அவற்றிற்கு மேலாகவும் என்னால் இயன்றளவு மக்களுக்காக சேவையாற்றியவன் என்ற வகையிலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ளேன்.

பிரதானமாக, குடாநாட்டிலும், வன்னிப் பிராந்தியங்களிலும் நீதிமன்றங்கள் இயங்காமல் இருந்த நேரங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்ல வேண்டிய நோயாளிகளின் போக்குவரத்து சேவையை யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளாலி வரையும், அங்கிருந்து நல்லூர் இறங்குதுறை வரை மிகத் திகிலான அனுபவங்களுடன் படகிலும், அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலை வரை கிளிநொச்சிக் கிளையில் தங்கவிட்ட யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலமும் வழங்கப்பட்ட அச் சேவையின் செயற்பாட்டு பொறுப்பு அலுவலராக குறித்த நோயாளிகளுடன் மக்கள் சேவையை மாத்திரம் நோக்காக கொண்டு பயணித்து செயற்பட்டு வந்ததுடன், பின்னர் 1997ஆம் ஆண்டில் நீதிமன்றங்கள் செயற்பட ஆரம்பித்து நீதிபதியாக கடமையாற்றிய காலங்களிலும் நீதிமன்றங்களில் ஏற்பட்ட வேலைவாய்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் முகமாக வடபகுதி இளைஞர் யுவதிகள் நேர்முக தேர்விற்காக தென்பகுதி செல்வதில் காணப்பட்ட தடங்கல்களை கருத்தில் எடுத்து அவர்களின் வேலைவாய்ப்பு உரிமையை நிலைநாட்டும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுத்து நியமனங்களை உறுதி செய்து பெற்றுக் கொடுத்ததோடு, போர்க்கால கட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் குடும்பமாக படகுகளில் இந்தியாவிற்கு தஞ்சமடைய கடலில் பயணம் செய்யும் போது சட்டவிரோதமான முறை என கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட போதும் சட்டமா அதிபரினால் இவர்களுக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லையென நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கமைய அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டிய நிலைமையில் விடுதலையானவர்கள் பலர் தமக்கென யாருமற்ற சூழ்நிலையில் சுதந்திரமாக வெளியே சென்று தங்க இயலாமல் இருந்த சூழ்நிலையிலும், தொடர்ந்து சிறைச்சாலையில் தங்க சட்ட ஏற்பாடுகள் அற்ற நிலையிலும் உரிய அதிகாரிகளின் அனுமதிகளை சிரமங்களின் மத்தியில் பெற்று காலஞ்சென்ற எனது மனைவியின் முழுமையான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுடன் அவர்களை தங்கவைத்து பராமரிக்கும் ஒழுங்குகள், ஏற்பாடுகள் யாவையும் என்னால் மனித நேயத்துடனும், இதய சுத்தியுடனும் செய்யப்பட்டது.

எனவே, தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ள நிலையில், அவ்வாறு நான் செயற்பட வேண்டும் என நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து, உங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று உங்கள் பொன்னான வாக்கினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதய சூரியன் சின்னத்திற்கும் எனக்கெனத் தரப்பட்டிருக்கும் இலக்கமான முதலாம் இலக்கத்திற்கும் புள்ளடியிட்டு என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்டுள்ளதை வெளிக்காட்டி தேர்ந்தெடுப்பதன் மூலம் என்னால் சேவை மனப்பாண்மையுடனான அர்ப்பணிப்புடனும், மன சுத்தியுடனும், இதுவரை நான் சேவையாற்றியது போல தொடர்ந்தும் இந்த புதிய பரிமாணத்தில் என்னால் உங்களுக்கு சேவையாற்ற முடியும் என்பதை என் இனிய தமிழ் பேசும் இதயங்களுக்கு இத்தால் வெளிப்படுத்தி உறுதி கூறுகிறேன்.

**எமது அரசியல் பிரச்சினைக்கான தீர்வு**

1985ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி பூட்டான் நாட்டிலுள்ள திம்புவில் இலங்கை அரசும், தமிழர் விடுதலைக் கூட்டணியோடு விடுதலைப் போராளிக் குழுக்களான தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈறோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் என்பவற்றை அடக்கிய ஈழம் தேசிய விடுதலை இயக்கமும், புளொட் இயக்கமும் [illegible] பேச்சுவார்த்தை ஆரம்பமானது. திம்பு மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் [illegible] குழுக்கள் நான்கம்சத் திட்டத்தை முன் வைத்தனர். அதுவே திம்புக் கோட்பா[illegible]

அம்சங்களாவன:

01. தமிழர்தனித்த தேசிய இனம்.
02. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்தாயகம்.
03. தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.
04. இலங்கையைத் தாய்நாடாகக் கொள்ளும் அடிப்படை உரிமை எல்லாத் தமிழருக்கும் இருக்க வேண்டும்.

இலங்கை அரசு நான்கு கோரிக்கைகளையும் நிராகரித்தமையால் திம்புப் பேச்சுவார்த்தை தீர்வின்றி முடிவுற்றது.

1985ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 09ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு தமிழ் மக்களின் மூன்று அடிப்படைக் கோரிக்கைகளாக (அ). சிதையாத தமிழர் தாயகம், (ஆ). நிலம் சம்பந்தமான அதிகாரப் பங்கீடு, (இ). உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும் என தெளிவாக நீண்ட கடிதம் எழுதியிருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட "இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்குதலை நோக்கி" என்ற பிரசுரத்தில் உள்ளடக்கியவற்றை ஒட்டியே 1987ஆம் ஆண்டு ஆடி மாதம் 27ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து இலங்கை அரசியலமைப்புக்கு 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகள் உருவாக்கி அதிகாரப் பரவல் செய்யப்பட்டதாக விளம்பிய போதிலும் நடைமுறையில் அது அர்த்தமுள்ள வகையில் செயல் வடிவம் பெறவில்லையென்பது வெள்ளிடைமலை.

பிரதானமாக, இலங்கை அரசியல் வரலாற்றில் சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக ஒற்றையாட்சியிலிருந்து விலகி பிராந்தியங்களின் ஒன்றியம் (UNION OF REGION) என்ற நிலைப்பாட்டை மையமாகக் கொண்ட அரசியலமைப்பு வரைபு முன்மொழியப்பட்ட போதிலும் அது கிழித்தெறியப்பட்டது.

அதன் பின் 2002ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் கிளிநொச்சி நீதிமன்ற கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களால் பிராந்தியங்களின் ஒன்றியம் என்பதனை மையமாகக் கொண்டு வரையப்பட்ட அரசியலமைப்பு வரைபு தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதை தெளிவாக குறிப்பிட்டு ஆனால் அவ்வரையின் சிறகுகள் வெட்டப்பட்டு விட்டதென குறிப்பிட்டார். எனவே, எமது விடுதலைப் போராளிகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாயின் அந்த அரசியலமைப்பு வரைபுக்கு மீண்டும் உயிரூட்டப்பட வேண்டுமென்பது எனது எண்ணமாகும். ஆகவே, என் இனிய தமிழ் பேசும் மக்கள் இத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை வழங்கினால் அந்த அரசியலமைப்பு வரைபுக்கு செயல் வடிவம் கொடுக்க அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செயலாற்றுவோம் என உறுதியளிக்கிறேன்.

**மேலும் தாங்கள் ஆணை வழங்கும் பட்சத்தில்**

- ஆட்சிமொழியாக்கப்பட்ட தமிழ்மொழியை நீதி, நிர்வாகத் துறைகளில் அமுல்படுத்த அரசியலமைப்பில் செய்யப்பட்ட 16ஆவது திருத்தத்தை நுழைவாயிலாகக் கொண்டு வடக்கு கிழக்கு மகாணங்களிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆட்சிமொழியாக தமிழ்மொழி கோலோச்ச வகை செய்தல்.
- சட்டம் - ஒழுங்கு, நிலம், கல்வி, காணிசாரம், சுகாதாரம், உள்ளூராட்சித்துறை என்பவற்றை முழுமையாக பிராந்திய சபையிடம் கையளித்தல்.
- கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ் பேசும் மக்களுக்கு சம்பூரண சமஉரிமையை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணத்தில் உடனடியாக தொழில் நீதிமன்றம் மீள செயற்பட நடவடிக்கை எடுத்தல்.
- ஏனைய பிரதேசங்களைப் போன்று வடக்கிலும் தொழிற்சங்கங்களை வளரச் செய்து ஸ்திரப்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.
- பெண்கள் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்தி, சமூகத்தில் உரிய அந்தஸ்துடன் வாழ வழிசமைத்தல்.
- பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை துடைத்தெறிய, சமுதாய விழுமியங்களை பேணும் பொறி முறைகளை சமூகத்தில் உருவாக்குதல்.
- பிராந்திய மட்டத்தில் ஒரு உயர் நீதிமன்றம் அமைக்கப்படுதல்.
- பிராந்திய சபைகளுக்கு பொருளாதார ஒதுக்கீடு பற்றி தீர்மானம் செய்வதற்கு ஒரு நிதிக்குழு உருவாக்குதல்.
- அரசியல் கைதிகளை விடுதலை செய்யவோ அல்லது குறைந்தபட்சம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.
- போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல் அல்லாதுவிடின் சுயதொழிலில் ஈடுபடும் வாய்ப்பையேனும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுத்தல்.
- இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகள் மற்றும் நிலங்கள் எதுவித மறுப்புமின்றி உடனடியாக உரியவருக்கு கையளிக்கப்படவும், மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த சகோதர முஸ்லீம் மக்கள் அனைவரையும் அவரவர் இடங்களில் மீளக் குடியேறவும், குடியேறும் மற்றும் குடியேற்றப்படும் சகோதர முஸ்லீம் மக்களின் அவசிய தேவைகளை அடையாளம் கண்டு பூர்த்தியாக்கப்படல்.
- மீன்பிடி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் வட பகுதி மக்களை பாதிக்காத வகையில் சுமூகமான தீர்வுக்கு இணங்கவேண்டும் வலியுறுத்தி, தீர்வுக்கு உதவுதல்.

போன்றவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செயலாற்றுவோம் என உறுதியளிக்கிறேன்.

தமிழ் பேசும் மக்களாகிய நீங்கள் ஒன்றிணைந்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் சாணக்கியத்துடன் புத்திசாலித்தனமாக வாக்களித்து ஒரு ஜனாதிபதியை மாற்றக் கூடிய சக்தியை அகிலத்திற்கு வெளிப்படுத்தினீர்கள். அதேபோல எதிர் வரும் பொதுத் தேர்தலிலும், நேர்மையான அரசியல் கொள்கையில் உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தின் மீது தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை தார்மீகக் கடமைகளை சரிவரச் செய்ய மனோதிடம் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஒற்றுமையாக ஒருமித்து வாக்களித்து தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் இறைஞ்சுகின்ற அர்த்தமுள்ள அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென அறைகூவல் விடுக்கிறேன்.

நன்றி.

இ. த. விக்னராசா

**இ. த. விக்னராசா**
**ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி**
**தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர்**



1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கர்த்தருக்குள் நித்திரையடைந்த ஆசிரியர் திலகம்

# சித்தன் பாலசுப்பிரமணியம் அவர்களின்

# 31 ஆம் நாள் நினைந்துருகல்

### அருட்திரு. எஸ். ஏ . றொஷானின் இதயத்தில் இருந்து

" பாலா" ஆசிரியரின் திடீர் மரணம் வேதனைமிக்க செய்தியாக அமைந்தது. மனித உருவாக்கத்தில் சமூகத்தில் பலர் அங்கம் வகிக் கின்றனர். குறிப்பாக ஞானத்தையும் அறிவையும் ஊட்டும் ஆசான்களின் பங்கு மிகப் பெரியது. பல ஆசிரியர்கள் எமது வாழ்வில் கல்விச் செல்வத்தை வழங்கிய போதிலும் ஒருசிலர் மட்டுமே எம் மனங்களில் தங்கிவிடு கின்றனர். அவ்வகையில் ஆசிரியர் பால சுப்பிரமணியம் அவர்களை நான் எனது உள்ளத்திலும், கல்வி வாழ் விலும் சுமந்து செல்கின்றேன். யாழ் மத்தியில் கல்வி பயிலும் காலத் தில் எனது விஞ்ஞான ஆசிரியராகவும், வகுப்பாசிரியராகவும் இருந்து தமது சிறப்பான ஆன்மிக,கல்வி, ஆளுமைத் திறன்களால் என் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தினார். ஏட்டுக் கல்வியை மட்டுமன்றி வாழ்வியல் விழுமியங்களையும் சேர்த்துக் கற்றுக் கொடுத்த ஒரு கல்விப் பெருந்தகையாக அவரைப் பார்க்கின்றேன்.

அவருக்கும் எனக்கும் இடையிலான உறவு கல்லூரி வாழ்வுடன் முடிவுறவில்லை, எனது குருத்துவ விழாவிலும், குருத்துவப் பணி தளங்களிலும் சிறப்பாக நான் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப்பணியில் ஈடுபடும் இக்காலம் வரை என்னைத்தேடி வந்து ஆலோசனைகளையும் , வழிகாட்டல்களையும் வழங்கி வந்த ஒரு கல்விச் செம்மலை இழந்தமை குடும்பத்தினருக்கு மட்டுமன்றி எம் போன்ற பழைய மாணவர்களுக்கும் ஈழக்கல்வி உலகிற்கும் பேர் இழப்பாகும் . அவரின் இழப்பில் 31 ஆம் நாளில் கலங்கி நிற்கும் குடும்பத் தினரோடு எனது துயரையும் பகிர்ந்து கொள்கின்றேன். அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற எனது செபங்கள்.

**அருட்திரு. எஸ். ஏ. றொஷான் உப அதிபர்**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

---

### சரியான தடத்தில் இயங்கவைத்தவர்

'பாலா மாஸ்டர்' என்று எல்லோராலும் அன்புரிமையுடன் அழைக்கப்படும் திருவாளர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியர் என்ற தொழில்முறையிலும், சிறந்த நட்பாளர் என்ற தோழமை முறையிலும் என்னுடன் நெருக்கமான தொடர்பைத் தனது இறுதிக் காலம்வரை தொடர்ந்தவர். விஞ்ஞான பாடம் என்றாலே அஞ்சிய மாணவர்களைத் தனது தனித்துவமான கற்பித்தல் பாணியால் விஞ்ஞானத்தின் மீது ஈடுபாடு கொள்ளவைத்து அவர்களது அறி வாற்றலை வளர்த்தெடுத் தவர். நல்லாசிரியராக எனது 'யூனிவேர்சல்' கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை நல்கியவர். ஆசிரியத் தொழிலிலும், தனிப்பட்ட எனது குடும்ப வாழ்விலும் முகத்துதி இல்லாமல் நடுவுநிலை நின்று என் செயற்பாடுகளை விமர்சித்து என்னைச் சரியான தடத்தில் இயங்க வைத்த ஒரு நல்லவிமர்சகர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நான் வணங்கும் இயற்கை என்னும் பேரிறை வனை இறைஞ்சி நிற்கிறேன்.

**பொ.ஐங்கரநேசன்**
**அமைச்சர்**
விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல்,நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு வடமாகாணம்.'

---

### ஆசிரியத்துவத்தின் கலங்கரை விளக்கு

அமரர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். நல்லதோர் குடும்பத் தலைவனாக , பாசம் மிகு தந்தையாக , அன்பு கொண்ட சமூகசேவை யாளனாக , அறிவு புகட்டும் ஆசிரியராக வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்த அமரர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களின் பண்பு எவராலும் மறக்கப்பட முடியாது. ஆசிரியத் தொழிலில் இளைப் பாறினாலும் தனியார் கல்வி நிலையங் களில் புகழ் பூத்த விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றிய பாலாசேர் என செல்லமாக அழைக்கப்பட்ட அவரின் சேவை மணவர்களினால் என்றும் மறக்கப்படமுடியாது.

கஷ்டமான விஞ்ஞான பாடத்தை இலகுவாகக் கற்பிக்கக் கூடிய ஆற்றல் மிக்க ஆசிரியராக அவர் திகழ்ந்த காரணத்தால் ஆயிரக் கணக்கான மாணவர்கள் அவரை நாடிச் சென்று அவரிடம் கல்வி கற்றதை நான் நன்கறிவேன். மனிதநேயம் மிக்க அவரின் ஆசிரியப் பணி மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்க உதவியதுடன் அவருக்கு பெருமளவான நண்பர்களையும் பெற்றுக் கொடுத்தது. எனக்கூறினால் அது மிகையாகாது. நண்பர் அமரர் சி. பாலசுப்பிரமணியம் யுத்த காலத்திலும் தான் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற மனோநிலையினால் யாழ் மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து தனியார் கல்லூரிகளிலும் ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் அயலூரைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினால் அவரை நாளாந்தம் சந்திக்கும் வாய்ப்பினைத் தந்ததுடன் சமகால அரசியலை கலந்துரை யாடும் வாய்ப்பைத் தந்திருந்தது. எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கான பல ஆக்க பூர்வமான கருத்துக்களைக் கொண்டிருந்த அவர் அவற்றை தனது விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் வேளையிலேயே மாணவர்களின் உள்ளத்தில் விதைத்திருந்தார். அது அவர்களை நல்ல கல்வி மான்களாக மாற்றிய அதேநேரம் சமூக நோக்குள்ளவர்களாக வும் மாற்றியது என்றே கூறுதல்வேண்டும். இத்தகைய ஆசிரியப்பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஆசிரியர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களின் இழப்பு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தி னருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா ஆண்டவன் திருவடியில் இருந்து எம்மை வழி நடத்த வேண்டும். என்று இறைவனிடம் இறைஞ்சி நிற் கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா**
**தலைவர்/ வணிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்.**

---



## சி.பாலசுப்பிரமணியம்

**(விஞ்ஞான ஆசிரியர்/ பகுதித்தலைவர்)**

**பிறந்தது: 25.12.1946**

**உயர்கல்வி கற்றது, ஸ்கந்தவரோதயக் கல்லூரி,சுன்னாகம்.**

### ஆசிரிய சேவை விவரம்

**முதல் நியமனம்: 02.10.1970**

- 02.10.1970 - யா/சுன்னாகம் மயிலணி சைவ .வித்தி
- 15.02.1971 - யா/பலாலி ஆசிரியர் கலாசாலை (பயிலுநர்)
- 01.01.1973 - மட் /மண்டூர் ம.வித்தி.
- 15.01.1973 - மட்/ அக்கரைப்பற்று ம.வித்தி.
- 01.05.1973 - அநு/ விவேகானந்தா த.ம.வித்தி.
- 11.03.1977 - அநு/கப்பிரிகல் வெவ மு.ம.வித்தி.
- 10.02.1978 - யா/யாழ்.மத்திய கல்லூரி
- 15.09.1987 - யா/அனலைதீவு சதாசிவ ம.வித்தி.
- 10.10.1988 - யா/விக்கினேஸ்வரா வித்தி.
- 01.08.1989 - 24.04.2006 - யா/யாழ். மத்திய கல்லூரி.

### கடமை உணர்வு மிக்க ஆசிரியர்

அமரர் பாலசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் சத்தியசாயி பாட சாலையில் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஜூலை 3 ஆம் திகதி வரையும் விஞ்ஞான பாடத்தினை ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியனாகக் கடமையாற்றினார். அவர்கள் முன் மாதிரியாக கடமையுணர்வு மிக்க ஆசிரியராக பணியாற்றியமை அவருக்கே உரிய தனிச் சிறப்பாகும். அவரிடம் காணப்பட்ட போற்றிப் பாராட்டத்தக்க பண்வு நேர முகாமைத்துவம் ஆகும். அவர்களின் இழப்பு ஆங்கில மொழிமூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றிடமா கியுள்ளமைகண்கூடாகும் இவரின் ஆத்மா ஆண்டவன் அடியில் அமைதியுறப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**திருமதி ப. பத்மநாதன்**
அதிபர், சத்தியசாயி பாடசாலை.

---

மத்தியின் தாயின் புகழ் பூத்த ஆசிரியப் பெருந்தகையே வித்தகம் புரியும் வியத்தகு விஞ்ஞானத்தை மெத்தனமாய் எமக்கு கற்பித்த பெரியோனே சந்தேகம் மாணவர்க்கு இல்லாமல் சத்தமாய் கற்பித்த ஆசிரியரே இந்தப் பூவுலகம் உள்ளவரை எம் நெஞ்சில் மட்டுமல்ல மத்தியின் மைந்தர்கள் மனங்களிலும் வாழ்வீர்கள் பூதவுடல் பிரிந்தாலும் உங்கள் புகழ் உடல் பூமி எங்கும் வியாபித்து இருக்கும்.

த. கருணாகரன்
(உதவி முகாமையாளர் சமுர்த்தி வங்கி - யாழ் நகர் மேற்கு)
த. தயாபரன் (ஆசிரியர்)

---

### விஞ்ஞானம் என்றால் பாலாசேர்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விஞ்ஞான பாடத்தினைத் தனக்கேயுரித்தான பாணியில் கற்பித்து பல மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். கல்லூரியில் விவசாய மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் சுபாவம் கொண்டவர் இதனால் பழைய மாணவர்கள் பலர் இன்றும் கல்லூரியை நேசிப்பதுபோல் பாலா ஆசிரியரையும் நேசிப்பதை அவதானித்துள்ளோம். கல்லூரியில் சேவைக் காலத்தில் 10 வருடங்களுக்கு மேலாகப் பகுதித் தலைவராக கடமையாற்றி நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட உழைத்தவர். இவரின் இழப்பு குடும்பத்துக்கு மட்டுமல்ல யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் [illegible]

[illegible] திருச்செல்வம் (ஆசிரியர்)
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

---

### சயன்ஸ் பாலாவின் நினைவலைகள்

நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல பெருமை மிக்க ஆசான்கள் தங்கள் கற்பித்தல் திறமையினால் தடம்பதித்து சென்றுள்ளார்கள்.

அந்த வரிசையில் தமது விஞ்ஞான பாட வினைத்திறன் மிக்க கற்பித்தலினால் இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக யாழ் மத்திய கல்லூரியில் பல நூற்றுக்கணக் கான மாணவர்களிற்கு நல்ல விளைதிறன் கிடைப்பதற்கு காரணமாக அமைந்தவர் அமரர் பாலசுப்பிரமணியம் என்றால் அது மிகையாகாது.

அதனாலேயே SCEINCE BALA என அழைக்கப்பட்ட பெருமைக் குரிய அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் புகழுடன் பணியாற்றினார் கள். இருந்தாலும் அவ்வாறான நல்ல-வாய்ப்புகளை தவற விட்டதாக கவலைப்படும் மாணவர்களும் பலர் உண்டு. எடுத்துக்காட்டாக நீயோ நிறுவன உரிமையாளர் பாஸ்கரன் கொழும்பில் பிரபல வர்த்தகராக விளங்கும் நியாஸ் போன்றவர்கள் கவலைப்படுவதுண்டு. இருப்பினும் மத்திய கல்லூரியில் நல் ஆசான்களிடம் பெற்ற அடிப்படை அறிவினால் சிறந்த தொழில் அதிபர்களாக விளங்குவதனால் மனநிறைவடைகின்றனர்.

அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சக ஆசிரியருடன் மிகவும் அன்பாக பழகும் சுபாவமுடையவராகவும் விளங்கினார். அமரர் நீண்டகாலம் ஆசிரியராகவும் பிரிவுத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்பும் தமது சேவையினை தமது சொந்த ஊரில் தொடர்ந்து வழங்கி வந்துள்ளார்.

ஓய்வு காலத்தில் மத்திய கல்லூரியில் அமரர் தவறாது கலந்து கொள்ளும் நிகழ்வு பெரும் துடுப்பாட்டமாகும். பெரும் துடுப்பாட்ட காலத்தில் இரண்டு, மூன்று தினங்களும் தம் பழைய மாணவருடன் இணைந்து மகிழ்ச்சியாக துடுப்பாட்டத்தை இரசிப்பதுமுண்டு. இவ்வாறான மாணவர்களுடன் மிகவும் நெருங்கி பழகும் சுபாவத்தினால் அவர் மீது அன்பு செலுத்தும் பழைய மாணவர்கள் உள் நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் பரந்துளளனர்.

நான் அவருடன் நீண்ட காலம் இணைந்து பணியாற்றியமையால் அமரரின் பிரிவுச் செய்தியை தொலைபேசி ஊடாகக் கேட்டதும் ஒரு கணம் அதிர்ந்து போனேன்.

அமரர் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்ற வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. என்னாலும் எங்களின் நட்பு காரணமாக அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைக்காக வெளியிடப்படவுள்ள கல்வெட்டு பிரார்த்தனை மலரில் எனது இரங்கல் செய்தியை பதிவு செய்ய வாய்ப்பு கிடைத்தமையிட்டு மனநிறைவடைவதுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்கள் என்னும் வாக்கிற்கு இணங்க அமரர் கர்த்தருடன் இணைந்து நித்திய சுகத்தினைப் பெற பிரார்த்திக்கின்றேன்.

**ப.திருஞானசம்பந்தன்,**
**உப அதிபர், யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**

---

### "பாலாசேர்" ஒரு விஞ்ஞான பொக்கிஷம்

மத்தியில் நீண்டகாலம் கல்விப் பணியாற்றிய ஆசான்களில் அமரர் பாலா ஆசிரியரும் ஒருவர்.

இவர் ஆங்கில மொழி மூலம் பயின்றதால் விஞ்ஞான பாடத்தை இருமொழிகளிலும் எளிதாகப் போதிக்கும் திறன்கொண்டவர். இவர் ஒரு விஞ் ஞானப் பொக்கிஷம்.

எமது பாடசாலையில் மட்டு மல்ல இலங்கையின் பல பாகங் களிலும் ஆசிரிய சேவையாற்றியவர். யாழ். மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் விஞ்ஞான அறிவை உயர்த்திய வர்களில் முக்கியமானவர் என்ற பெருமைக்குரிய இவர், யாழ். மாவட்டத்திற்கு வெளியிலும் ஆசிரியவளம் குறைந்த கஷ்டப் பிரதேசங்களிலும் உள்ள மாணவர்களுக்கு இலவச கருத்தரங்குகளில் மனமுவந்து இணைந்து சேவைசெய்தவர்.

அனைத்து மாணவர் உள்ளங்களி லும் "பாலாசேர் " என இறுக்கமாக இணைந்த இவர் யாழ். மத்திய கல்லூரியில் மூத்த ஆசிரியராக இருந்து சேவைசெய்தது மட்டுமன்றி பகுதித் தலைவராக இருந்து தனது நிர்வாகத்திறனை கல்லூரிக்கு வழங்கிப் பெருமை சேர்த்தவர்.

சக ஆசிரியர் மத்தியிலும் "பாலாசேர்" என்ற ஆழப்பதிந்த சிறந்த ஆசான் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார் என்ற செய்தியைக்கேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

V.S. மகேந்திரன்
யாழ். மத்திய கல்லூரி ஓய்வுநிலை,
விளையாட்டு முதல்வர்.
V. தயாபாலன் ஆசிரியர் - யாழ். இந்துக்கல்லூரி.

---

### "மத்தியின் மணி பாலா சேர்"

யாழ் மத்தியின் முன்னாள் விஞ்ஞான ஆசான் அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியிலும், எமது பிரதேசத்திலும் தனக்கென அழியா முத்திரை பதித்துச் சென்றவர் பாலா சேர் என்றால் மத்தியின் பழைய மாணவர் சமூகம் முழக்கமிட்டு அவர் புகழ் பாடும். அவரால் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகளானோர் எண்ணிலடங்கா. இவர் சேவையில் கல்லூரியும், சமூகமும் பூரிப்படைந்த காலம் என்றும் மறக்கப்படாது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பாலா சேருக்குரிய தனிப்பண்புகள். கண்டிப்புடன் கற்பித்து சாதிக்கும் கலையே அவருக்குரிய தனித் தகைமை. தன்னலமற்ற சேவையாளன். பாலா சேர் அவர்கள் மத்தியின் மனதில் நித்தம் நிலைத்திருப்பார். அவரது ஆன்மா சாந்தி பெறுக.

ம.மரியதாஸ்
உப. அதிபர் யாழ். மத்திய கல்லூரி.

**யா/ யாழ். மத்திய கல்லூரி**
**பழைய மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணித் தாய்மார்களின் பொருள்களில் மோசடியா?

## சுன்னாகம் சங்கத்திடம் விளக்கம் கோரியுள்ளார் பிரதேச செயலர்

வலி வடக்கு, ஓக 9

கார்ப்பினித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தில் அரசால் அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக பொருள்கள் வழங்கப்படாமை குறித்துச் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடம் பிரதேச செயலரினால் எழுத்து மூலம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட வேண்டிய நெத்தலிக் கருவாடு, மீன் ரின் போன்ற பொருள்களுக்குப் பதிலாக சோடா மற்றும் பிஸ்கட் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பயனாளிகளிடம் இருந்து முறைப்பாடுகள் பிரதேச செயலகம் வரை சென்றன.

இதனையடுத்து இது குறித்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த விநியோகம் பற்றிக் கிராம அலுவலர்களையும் கண்காணிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் குறிப்பிட்ட கிராம அலுவலர்களுக்குக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எத்தகைய பொருள்கள் சங்கத்தினால் வழங்கப்படவேண்டும் என்ற தகவல் எதுவும் வழங்கப்படாமையால் எதுவும் தெரியாத நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (த-86)

## சட்டவிரோத சிகரெட் விற்றவர் கைதானார்

வலி வடக்கு, ஓக 9

சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட சிகரெட்டை விற்ற கடை உரிமையாளர் ஒருவர் தெல்லிப்பழை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற வீதயில் உள்ள கடையொன்றில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட் விற்பனை செய்யப்படுவதாகத் தெல்லிப்பழை பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிசார் கடையைச் சோதனையிட்டனர்.

அதன்போது கடையில் இருந்து சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட் பைக்கெற்றுக்கள் பிடிபட்டதுடன் கடை உரிமையாளரும் பொலிசாரினால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.(த-86)




## மட்டுவிலில் இளைஞர் மீது மோசமான தாக்குதல்

தென்மராட்சி ஓக. 9

ஓட்டோவில் சென்ற இளைஞரை வழிமறித்த கும்பல் அவரை மோசமாகத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றமுன்தினம் நள்ளிரவு மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

வீட்டு மின்னிணைப்பு வேலையில் ஈடுபடும் இளைஞர் வேலை முடிந்து வீடு திரும்புகையில் வழியில் காத்திருந்த கும்பல் ஓட்டோவை மறித்து மோசமாகத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் நிரோஜன் ( வயது 24 ) என்பவர் நேற்று அதிகாலை 1.00 மணிக்கு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
மருதனார்மடம் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
**தொடர்பு :077 328 8795**

### விற்பனைக்கு
1. 135 பெர்குசன் - இங்கிலாந்து உளவு இயந்திரம், நீள கிறாங், 49XXXX நல்ல நிலையில் உள்ளது, பெட்டி Rx - XXXX, ரீலர் கலப்பை.
2. முச்சக்கரவண்டி - 39000 Km ஓடியது YI - XXXX பஜாஜ் - நீல நிறம்.
3. ஜெனரேற்றர் - 10KW என்ஜின்.
4. புதிய வெல்டிங் றான்ஸ் போமர்.
5. டவுண் ஏசீ வாகனங்களுக்கு சௌகரியமான ஆஸ் கலர் ரேபிள் மொடல் சீற்.
6. 3 நூல் ஓவலொக் தையல் மெசின்.
7. சிங்கர் தையல் மெசின் ஒன்று.

**தொடர்பு - 077 765 7065**

### காணி, வீடு விற்பனைக்கு
நீர்வேலிச் சந்தியில் யாழ்ப்பாணம் போகும் வீதியில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் 1 பரப்பும் 5 குழியும் சிறிய வீடும், மலசலகூடம், கிணறு என்பவற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
(61935) (9.3.7) 075 506 2126, 021 222 1991

### விற்பனைக்கு
28 சிறீ, 2பற்றறி கொண்டது, C.E.B இடமிருந்து கொள்வனவு செய்த லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**071 818 4210** (57178) (9.3.7)

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி - பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M (½Km) தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், புகையிரத நிலையம், சந்தை , கடை முதலியவற்றிலிருந்து நடந்து செல்லக் கூடிய தூரத்தில் பஸ் வசதியுடன் வீதிக்கு அருகில் அமைந்த 75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பத்தக்க அளவு துண்டங்களாகவோ, முழுமையாகவோ (வரைபட முள்ளது) விரும்பியபடி வாங்க முடியும். எதிர்பார்ப்பு - பரப்பு 4லட்சம் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.
திருமதி யோகா நாகேந்திரம், கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில், பருத்தித்துறை வீதி, கெருடாவில், சாவகச்சேரி.
**தொடர்பு: 077 160 1115**
No Brokers Please. (11890) (9.3.7)

### காணிவிற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை, விபுலானந்தர் வீதியில் புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கு பின்புறம் 2 பரப்பு 4.45 குளி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 077 5004869, 021 222 9558** (61957) (10.6)

### கார் விற்பனைக்கு
உற்பத்தி ஆண்டு - 2011 ஆகஸ்ட்
Metre reading - 54000Km
வகை மாருதி சுசுக்கி WegenR
விலை - 16.5 லட்சம் ரூபா
தொடர்பு:
**077 773 0324** (61942)(9.3.7)

### காணி விற்பனைக்கு
உரும்பிராய் தெற்கில் ஐயப்பன் கோயில் வீதியில் நி.ப. 2, குளி 15.61 கிணறும், வெற்றுக் காணியும் விற்பனைக்கு உள்ளன.
**தொடர்பு: 071 636 1866** (63846) (9.3.7)

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து அண்ணளவாக 750 மீற்றர் தூரத்தில் (கண்டுவில் 2ஆம் ஒழுங்கை ) 8பரப்பும் 12 குளியும் அளவுள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. (மகளிர் கல்லூரி, தபால் கந்தோர், சாவகச்சேரி சந்தை என்பவற்றிற்கு அண்மைய பகுதி) தரகர் வேண்டிய தில்லை.
**தொடர்பு: 077 385 1645** (63843) (9.3.7)

### கார் விற்பனைக்கு
64 - XXXX ISUZU GEMINI டீசல், மனுவல், பவர் சட்டர் மிரர், இரண்டாவது உரிமையாளருடைய பாவனையில் உள்ள கார் உடனடி விற்பனைக்கு உண்டு. (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)
**தொடர்பு : 077 665 7771**

### வீடு விற்பனை
யாழ்ப்பாணம், அரியாலை ஸ்ரான்லி பாடசாலைக்கு அண்மையில் 5¼ பரப்பு காணி, வீடு, பங்குக் கிணறு நல்ல தண்ணீருடன் விற்பனைக்கு. நாவலடியில் 22 பரப்பு வயல் நாவலடி Camp க்கு முன்பாக விற்பனைக்கு
**தொடர்பு: 075 544 0503** (11869) (9.3.7)

### கன்டுக்குளியில் வீடு விற்பனைக்குண்டு
கண்டுக்குளியில் 2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
**தொடர்பு : 077 614 6434**

## தேவை

### பணிப்பெண் தேவை
சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் ஒருவர் தேவை.
**தொடர்பு: 071 103 5422** (61939) (9.3.7)

### மணமக்கள் தேவை
யாழ்.இந்து கௌரவகுடும்பம், வெளிநாட்டு 1980, உதயச் செவ்வாய், படித்த பெண்ணுக்கு, 1989 வெளிநாட்டு B.Sc படித்த (கனடா) பெண்ணுக்கு மணமகனும் , 1985, படித்த U.K ஆணுக்கு (UK) PR உள்ள பெண்ணும் தேவை.
**தொடர்பு: 077 715 0931** (61920) (9.3.7)

### வேலையாள்கள் தேவை
சங்கென் நிறுவனத்தின் யாழ்ப்பாண வேலைத்தளத்திற்கு மேசன்மார், மாபிள் பதிப்பவர் தேவை.
(தங்குமிட வசதி உண்டு)
தொடர்புகளுக்கு:
**071 869 7269, 077 122 9840**
**071 864 3636,077 312 6610** (11962)(9.3.7)

### காணி , வீடு தேவை
நல்லூர் கோவில் அருகில், நல்ல சூழலில் அமைந்த காணி / வீடு தேவை. (63846) (9.3.7)
**தொடர்பு: 077 217 4038**

### மணமக்கள் தேவை
* யாழ்.உயர் இந்து கௌரவ குடும்பம் (ஆண்), 1984, அத்தம், 12இல் செவ்வாய், 28 பாவம், அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அழகிய உத்தியோக மணமகள் தேவை.
* யாழ்.உயர் இந்து கௌரவ குடும்பம் (பெண்), 1988, பூசம், 1இல் செவ்வாய், 56 பாவம், விஞ்ஞான ஆசிரியைக்கு Bsc பட்டதாரி தரத்திற்குக் குறையாத உத்தியோக மணமகள் தேவை.

**தொடர்பு: 077 899 6281** (61942)(9.3.7)

### பணியாளர் தேவை - பெண்
வவுனியாவில் இயங்கிவரும் MIHIRAN DISTRIBUTOR நிறுவனத்திற்கு பெண் முகாமையாளர் தேவை. தகைமை A/L உடன் சிங்களம் பேசத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
**தொடர்பு : 077 971 7606**

### வீடு வாடகைக்குத் தேவை
மானிப்பாயை அண்மித்த பகுதியில் அரச உத்தியோகத்தருக்கு வாடகைக்கு வீடு தேவை.
**தொடர்பு: 077 667 0187**
(61934) (9.3.7) **077 736 1979**

### வேலை தேவை (Situation Wanted)
கொழும்பில் தனியார் நிறுவனங்களிலும் வெளிநாடுகளிலும் பணிபுரிந்து நாடு திரும்பியுள்ள 51 வயது நிரம்பிய கணக்காளர் ஒருவருக்கு வேலை தேவை. மும்மொழிகளிலும் நன்கு பேச, எழுத, வாசிக்கவும், கணினி மூலம் Accounts பதியும் (Tally, Quick Books, Excel) திறமையும் 25 வருட கணக்காளர் அனுபவமுடையவர்.
**தொடர்பு: 077 825 6620** (61922) (3.9.6)

### பணியாளர் தேவை
யாழ் நகரில் இயங்கும் நகை வியாபார நிலையத்திற்கு O/L, A/L தகைமையுடைய ஆண்கள் மட்டும் தேவை.
**தொடர்பு: 021 222 2863**
லலிதா ஜீவலர்ஸ்
No. 75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (11966) (3.9)

### OFFICE SPACE உடன் தேவை
25 வருடங்கள் அனுபவமுள்ள, கண்ணியமான, பிரசித்தி பெற்ற கொழும்பில் சேவையாற்றும் HR ஸ்தாபனத்துக்கு
* கொழும்பு -5, கொழும்பு -6 மற்றும் தெகிவளைப்பகுதிகளில் காரியாலய இடவசதி உடனடியாகத் தேவைப்படுகின்றது.
* மண்டபம் மற்றும் 2 - 3 அறைகளுடன்
* வாகனத்தரிப்பிட வசதியுடன்

தொடர்பு:
**077 776 0122, 077 720 9554**
**011 738 8791**
Email:
info@dineshgroup.lk
15, 1st FLOOR, PALMYRAH AVENUE, Colombo -03 (11880) (9.3.7)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## ஏனையவை

### தேவை
புத்தளத்தில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்திற்கு டிராக்டர் ஓடக்கூடிய Driver தேவை.தனியாகவோ/ குடும்பமாகவோ இருப்பதற்கு வசதிகள் உண்டு.
**தொடர்பு : 077 798 2871**

### வவுனியாவில் வேலைவாய்ப்பு
வவுனியாவில் இயங்கிக்கொண்டிருக்கும் கணினி நிறுவனத்திற்கு முகாமையாளர், சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் வேலைக்குத் தேவை.
**தொடர்பு: 077 858 6256** (61146) (9.3.7)

### வேலை வாய்ப்பு
1. வாடிக்கையாளர் சேவை அலுவலர்
2. சந்தைப்படுத்தல் ஆலோசகர்.

சுன்னாகம், கோப்பாய் பிரதேசங்களில் மேற்படி வேலை தொடர்பில் முன் அனுபவமும், வாடிக்கையாளர் சேவை அனுபவமும் இருப்பின் விரும்பத்தக்கது. அடிப்படைச் சம்பளத்துடன், ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

விளம்பர இல.5074
மே/பா உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு
K.K.S வீதி கோண்டாவிலில் வீடு குழாய் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு
**077 791 8342,077 653 2365**

### வேலை ஆள்கள் தேவை
வவுனியாவில் அமைந்துள்ள வைத்திய ஆய்வு கூடம் ஒன்றுக்கு உதவியாளர்கள் Account Clerk தேவை.
தொடர்பு:
**075 414 7949**

### ஸ்ரீ காளி அம்மன் ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை,நடக்கின்றவை நடக்கப்போகின்றவை பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

கைரேகை, நாம நட்சத்திரம், சாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தை, பாக்கியம், கணவன் மனைவி, ஒற்றுமையின்மை, வெளிநாட்டுப் பயணம், அனைத்தும் 11 நாள்களுக்குள் செய்துதரப்படும்.

**சிவசங்கர் சாஸ்திரி**
தொ.பே. 077 319 8014
இல.129/3,கஸ்[illegible]
([illegible])
நேரம்: காலை 7.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பார்க்கப்படும்.

### மிருக வைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு
**தொடர்பு: 0779738802, 0212242502**

### வாடகைக்கு
ஒரு அறை, ஒரு ஹோல், சமையல் அறை இணைந்த குளியலறையுடன் கூடிய மேல் வீடு வாடகைக்கு உண்டு.
**தொடர்பு: 077 715 0931** (61921) (9.3.7)


அருந்ததி
திருமண மாத இதழ்
250 மணமக்களின் விபரங்களுடன்
தற்பொழுது விற்பனையில்
அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
20, கே.கே.எஸ் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம். 021 49 27 527
வெள்ளவத்தை. 011 40 63 282


### வேலை வாய்ப்பு
இலங்கையிலுள்ள முன்னணி கல்வி நிலையம் ஒன்றுக்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் புதிதாக திறக்கப்படவுள்ள முள்ளியவளை, கிளிநொச்சி கிளைகளுக்கும் அலுவலக உதவியாளர்கள் தேவை.
**தொடர்பு :- British College**
**077 759 6148**

### வேலைவாய்ப்பு
Vision Lanka நிறுவனத்தில் தரம்-10 தொடக்கம் O/L, A/L படித்த ஆண்,பெண் இருபாலாருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.
Accountant, Store Keeper, Clerk, Computer Operator, Asst. manager.
உடன் தொடர்பு கொள்ள
T.P: 075 487 6233 ,078 468 7500

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம்- கொழும்பு பேருந்து ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கு இருபாலாரும் தேவை
**தொடர்பு : 077 386 6250**

### தேவை
கோப்பாயை வதிவிடமாகக் கொண்ட தாயாருக்கு நன்கு சமைக்கத் தெரிந்த பெண் பிள்ளை தேவை.சம்பளம் 20,000/= தனியான தங்குமிட வசதி உண்டு.
S.சரவணபவான்
No. 8A/1, De Ponseka Road ,Colombo- 05
தொடர்பு :250 1427


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 07.08.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றும் திருமதி **கார்த்திகா நிரோஷனின்** அன்புத்தந்தை தம்பு குமாரசாமியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை

## 31ஆம் நாளில் துயர்பகிர்வு

எமது நிறுவனத்தில் பணிபுரியும் மாணிக்கன் ஜெகநாதன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் முருகன் மாணிக்கன்**

08.07.2015 இறைபதம் எய்திய செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் 31ஆம் நினைவு நாளில் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர்கள்,**
**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, வட பிராந்திய தொழிற்சங்கம், யாழ்ப்பாணம்.**

(61967) (15.8)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

### அன்னலிங்கம் குமாரசாமி

(ஸ்டேசன் மாஸ்டர்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் குமாரசாமி 07.08.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரன்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பதேவியின் பாசமிகு கணவரும் சங்கரன் (லண்டன்), சரளா (ஆசிரியர்- சின்மய பாரதி)றேமளா, தாமோதரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமினி(லண்டன்), ஜெயக்குமார் (வைத்தியர்-ஆதார வைத்தியசாலை, மந்திகை), செங்குட்டுவன் (திட்டமுகாமையாளர்), சியாமளா(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் இஷானி, சுரீஷ், கீர்த்திகன், கம்சிக்கா, கருணிக்கா, ஜனனி, சுருதி, சௌமியா, கவீன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்வரத்தினம் மற்றும் ஞானம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்
0777055039

(61950)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் யோகேந்திரநாதன்

(முன்னாள் உத்தியோகத்தர் கச்சேரி திட்டமிடல் அபிவிருத்தி கச்சேரி யாழ்ப்பாணம்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் , கொக்குவில், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் யோகேந்திரநாதன்01.08.2015 சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் தங்கமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருமகனும் செல்வகுமாரியின்(செல்வம்) அன்புக் கணவரும் வான்மதி(பானு), ஐங்கரன், Dr. அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷாவின்அன்பு மாமனாரும்இஷாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தவமலர் மற்றும் சறோஜினிதேவி, வசந்தாதேவி, காலஞ்சென்ற மகேந்திரநாதன் மற்றும் குநேந்திரநாதன் காணகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில்.

(61914)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிர்காமத்தம்பி பாலச்சந்திரன்



மயிலன் பேக்கரி(வியாபாரி மூலை), றோயல் பேக்கரி(பருத்தித்துறை), மாருதி பேக்கரி(கிராமக்கோடு) ஆகியவற்றின் முன்னாள்முகாமையாளர் க.பாலச்சந்திரன் 07.08.2015 கொழும்பில் காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் தர்மினி( B.Sc, வயம்ப பல்கலைக்கழகம்), தோகினி(விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- 077 633 5146
077 613 9646

தகவல் :-
க.சதீசன்

# மரண அறிவித்தல்

## செல்லையா தில்லைநாதன்

### (சமாதான நீதிவான் - இளைப்பாறிய அதிபர்)



விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும்,"துவாரகை" உடுவில் தெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தில்லைநாதன் (முன்னாள் அதிபர், யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை) 04.08.2015 செவ்வாய்க்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராதா (முன்னாள் ஆசிரியை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) மற்றும் கணேசராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர், களனி வலயம்), ரஜனி (சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர், நூலகம், யாழ். பல்கலைக்கழகம்),கேதீஸ்வரன் (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), வசந்தமாலா (ஆசிரியை - விபுலானந்தா மகா வித்தியாலயம், கொழும்பு), சோதிநாதன் (இளைப்பாறிய உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்),வசந்தினி (ஜேர்மனி),காயத்திரி (கனடா),சுகர்ணா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசிங்கம், கமலாதேவி, தணிகாசலம், குஞ்சிதபாதம், பூவிலிங்கம் மற்றும் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், கந்தையா, வன்னியசிங்கம்,சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,யாழினி (ஆசிரியை- கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி) - ஜெனார்த்தனன் (ஆசிரியர் - யா/ மாதகல் சென் ஜோசப் ம.வி), கிரி ஷாந்த் - நிஷானி (ஆஸ்திரேலியா),இந்துஜா - கிரிஷாந்த் (ஆஸ்திரேலியா), ஜனுஜா, லக்ஷிகா (HNB அச்சுவேலி),ஆதீசன் (கொமர்ஷல் வங்கி,வேலணை), நிரூஷிகா (மாணவி, மருத்துவ பீடம் யாழ்ப்பாணம்), கீர்த்தனா, சுதர்ஷன் (ஜேர்மனி),ஷாலினி,ஷாமளி, கேதாரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆதிகேஷின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் மாளிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்,**
மகன்- 077 613 2286
மகள்- 077 912 2838

"துவாரகை"
உடுவில் தெற்கு, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### தம்பு குமாரசாமி (குமாரசாமி அன் சன்ஸ் கட்டட ஒப்பந்தக்காரர் - சின்னராசா)



மலர்வு 10.03.1943 உதிர்வு 07.08.2015

உடுவில் அம்மன் வீதியைப் பூர்வீகமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குமாரசாமி 07.08.2015 வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்புப் புதல்வரும், காலஞ் சென்றவர்களான கனகரத் தினம் - பாக்கியம் தம்பதி யரின் மருமகனும் தவமணி யின் பாசமிகு கணவரும் ரவிசங்கர், கோபி கிருஷ் ணா, திருமதி கார்த்திகா நிரோஷன் (யாழ்/திருக் குடும்ப கன்னியர் மடம்), ருத்ரா (கணிய அளவையியலாளர்), கல்யாணி (இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோ ஷனின் (IOM) பாசமிகு மாமனாரும் சுந்தரலட்சுமி (லண்டன்), தேவாம்பிகை (கனடா), சண்முகநாதன் (கனடா), கதிரவேலு (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணி (கனடா), அமரர் சோதிமலர், மகாலிங்கம், ரட்ணசிங்கம் (அமெரிக்கா), பாலசிங்கம், சந்திரமலர் (கனடா), தலையசிங்கம் (கனடா), சண்முகலிங்கம் (கனடா), அமரர்களான சின்னையா, பாலசுப்பிரமணியம் மற்றும் தனலட்சுமி (கனடா), மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மஹதியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.இல :077 662 4548
0044 773 728 0125

தகவல் -
குடும்பத்தினர்

## நன்றி செலுத்தும் ஆராதனையும் நன்றி நவிலலும்

### அமரர் சித்தன் பாலசுப்பிரமணியம்



மலர்வு 25.12.1946

உதிர்வு 03.07.2015

கடந்த 03.07.2015 காத்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர், எமது பாசமிகு தந்தையார் அமரர் சித்தன் பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து எம் இல்லத்திற்கு நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்த வர்க ளுக்கும் உள்ளூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி, பத்திரிகை, சமூக வலைத்தளம் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், ஜெபத்தின் மூலம் தாங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக் கும், மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி களை வழங்கிய மத குருமார், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும் நாம் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகம்

(ஓய்வு பெற்ற மாவட்ட காணிப் பதிவாளர் வடமராட்சி)

குரும்பைகட்டி,புலோலியைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகம்07.08.2015 வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் அமரர் பத்மாவதியின் அன்புக் கணவரும் சாந்தினியின்(முன்னாள் ஆசிரியை, யா/ ஹாட்லிக்கல்லூரி) அன்புத் தகப்பனாரும் ஜெயதேவன்(பொறியியலாளர்- அவுஸ்திரேலியா) அன்பு மாமனாரும்,ஜெயவிக்னனின் அன்பு பேரனும் அமரர் ஜெயபால சிங்கம்(ஓய்வுநிலை கல்லூரி அதிபர்)மற்றும் திருமதி ஜெயபால சிங்கம்(ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் சம்பந்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Unit 32/2 HYTHE STREET,
MOUNT DRUITT
NSW 2770
AUSTRALIA
T.P: 0061 296 752 289

தகவல்:
ந.பத்மநாதன்(மைத்துனர்)
(முன்னாள் பிரதி அதிபர் யாழ்/ ஹாட்லிக்கல்லூரி) குரும்பைகட்டி, புலோலி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் கந்தையா இராஜேந்திரம்



தோற்றம் 15 . 06 . 1943

மறைவு 11 . 07 . 2015

கடந்த 11.07.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

பழவளவு,
ஏழாலைமேற்கு, ஏழாலை.

குடும்பத்தினர்.
021 205 9030

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா இராசையா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா இராசையா 07.08.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரபாகு, இராசம்மா, தம்பு, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரன், பத்மலோஜினி(கனடா), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், கருணாநிதி, சறோஜினி தேவி(சுவிஸ்), சுசிலாதேவி (அவுஸ்திரேலியா), பத்மினிதேவி(கனடா), லங்கேஸ்வரி(கனடா), சுந்தரேஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராணி, சற்குணானந்தம்(கனடா), காலஞ்சென்ற சத்தியஞானதேவி மற்றும் விவேகானந்தன்(சுவிஸ்), ரட்னேஸ்வரன்(அவுஸ்திரேலியா), கலைஞானம்(கனடா), இரத்தினேஸ்வரன்(கனடா), ஸ்ரீகெங்கா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] லேன்,
[illegible]வில் மேற்கு,
கொக்குவில்.

தொடர்பு :- 021 491 7920
078 505 5005

தகவல் :-
இ.பரமேஸ்வரன்
இ.கருணாநிதி
(மகன்மார்)

(61956)

### புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

வடமராட்சி, ஒக. 9

இம்மாதம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்களுக் கான இலவசக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை வவுனியா அல்காமிய முஸ்லீம் பாடசாலையிலும் மறுநாள் செவ்வாய்க் கிழமை வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயத் திலும் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. செட்டிகுளம் பிரதேசசெயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்குக்குச் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற் குட்பட்ட மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வாழ்வெழுச்சி பிரதேச உத்தியோகத்தர் ந.சுசீந்திரராஜா அறிவித்துள்ளார். (த-422)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 021 567 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Majestic Cineplex Jaffna**

**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15



ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres

www.ceylontheatres.com



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111


## ஆடிப்பூர உற்சவம்
## ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயம்
## முள்ளிவாய்க்கால் மேற்கு, முல்லைத்தீவு

மேற்படி அம்பாள் ஆலய வருடாந்த ஆடிப்பூர உற்சவம் எதிர்வரும் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை சமுத்திர தீர்த்தம் எடுத்து வருவதுடன் ஆரம்பமாகி 18.08.2015 செவ்வாய்க்கிழமை காலை அடியார்கள் புடைசூழ அம்பாள் சமுத்திர தீர்த்தம் ஆடியதும் விழா இனிதே நிறைவடையும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(87178) (10.6) **ஆலய பரிபாலன சபை.**

# IMMEDIATE VACANCY

## SOFTWARE ENGINEER WEB DEVOLOPER

We warmly welcome talanted, Self motivated individuals with excellent programming knowledge and Sound Educational background to join our team

**Location - Jaffna** **Possition - 10**

Ideal candidates should be experienced in coding with programming.

★ Language Knowledge in PHP/C#, ASP, ASP-NET, HTML 5, CSS, J Query, JAVA Script.
★ My SQL & SQL Database.
★ Power shell

**Candidates Should also have the ability**

★ Function in Fast - Paced environment with small & medium sized teams.
★ Work with minimum supervision to meet deadlines
★ Motivated, result oriented mindset.
★ Clearly communicate with the team.

A competitive salary Package will be offered depending on your experience and talent.

Please send your CV including some of the work done in this field as portfolio with two names and details of non related refrees to below email address within 7 days.



thaha_haji@hotmail.com
risinrisim@gmail.com
CONTACT - 077 007 9081

### காணி விற்பனைக்கு

பளை இயக்கச்சி கோயில் வயல் பகுதியில் 80 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தென்னைப்பயிர் செய்கைக்குகந்த காணி உடனடி விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்

(பகுதிக்காணி சுத்தம் செய்யப்பட்டுள்ளது)

**தொடர்பு : 077 500 2162**

# VACANCIES

உங்களுக்கே மோட்டார் சைக்கிள்...

### முதற்தரமான வேலைவாய்ப்பு

மோட்டார் சைக்கிள் மேலதிக உதிரிப்பாகங்கள் விநியோகிக்கும் முதற்தரமான நிறுவனமாகிய லீடர் குறூப் கம்பனியின் உறுப்பினராகி எதிர்காலத்தை வெற்றி கொள்ள உங்களுக்குக்கிடைத்த நல்லதொரு சந்தர்ப்பம்

நாடெங்குமுள்ள எமது முகவர் வலையமைப்பின் முகாமைத்துவத்துக்காக

### விற்பனை பிரதிநிதிகள
### பயிலுனர் விற்பனைப்பிரதிநிதிகள்

விற்பனைப் பிரதிநிதிகள் பதவிக்காக குறைந்த வெளிக்கள அனுபவமேனும் வேண்டியதுடன் பயிலுனர் விற்பனை பிரதிநிதிகள் பதவிக்காக க.பொ.த உயர்தரம் சித்தி பெற்றிருத்தல் அவசியமாகும்.

உங்களுடைய விண்ணப்பங்களை இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

மனிதவளப் பிரிவு
வரை.லீடர் ஓட்டோ மொபைல் தனியார் கம்பனி
இல. 308, கொழும்பு வீதி, வலிகம்பிட்டிய, பொக்குணுவிட்ட.
மின்னஞ்சல் : hrm@leadergroup.lk
தொலைபேசி: 071 0 222 002

KAIJIE BATTERY · ENDURANCE · RIYELTA · CHAMPION

### தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவமுள்ள
* சிட்டை எழுதுநர்
* விற்பனையாள்
ஆண் தேவை.

**தொடர்பு : 077 544 4014**

### வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் CIL நிறுவனத்துக்கு Receptionist/ Administrative Officer தேவை.

Please call : 077 738 2108

mail your Cv: ciljaffna @ gmail com.

### வீடு வாடகைக்கு

யாழ். உரும்பிராயில் 8 படுக்கையறை 4 குளியல் அறை. மாடி வீடு காரியாலய தேவைக்கு உடன் வாடகைக்கு கொடுக்கப்படும். முன்பு சீன கம்பனிக்கும், மின்சார சபைக்கும் கொடுக்கப்பட்டிருந்தது

தொடர்பு: 0773658485 பார்வையிடல் : 021 2230785

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல. 8, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
011 250 4281, 071 299 1256

### Toner Refilling

HP / Cannon / Samsung/ Laser toner cartridges எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு : 076 669 3341

E-mail - pbs3solution@gmail.com

### காணி விற்பனைக்கு

அல்லாரை தெற்கு மீசாலையில் தென்னை மரங்கள் அடங்கலாக உள்ள 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 077 728 6031**

சாவகச்சேரி வடக்கு மருதடி டச்சு வீதியில் அமைந்துள்ள 16 பரப்பு தென்னை மரங்கள் அடங்கலாக உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 728 6031**

# VACANCIES IN DUBAI

## Interviews on 25th and 26th August 2015

### Closing Date for Applications 24 August 2015

| | | |
|---|---|---|
| FITTERS | 10 | AED 1600 |
| WELDERS | 5 | AED 1600 |
| BLASTING WORKERS | 10 | AED 1600 |
| PAINTERS | 10 | AED 1800 |
| FABRICATORS | 10 | AED 1800 |
| MACHINE OPERATORS | 5 | AED 1800 |
| CRANE OPERATORS/RIGGERS | 5 | AED 1800 |
| GRINDERS | 10 | AED 1800 |

1 AED=Rs36



Initial contract 2 years, food, accommodation, transport & medical provided by company. Joining and return air tickets provided.8 hours duty per day with one day off per week.Overtime will be paid as per uae rules. All other terms and conditions will be as per uae rules. Please call over and apply before 23th august 2015 with your cv, pictures, copies of passport,and all certificates to

ASHUTOSH MARINE & MANAGEMENT CONS SVC PVT LTD,
288, COTTA ROAD, COLOMBO 8,
TEL 0115736982,0115877978,0777418014

CV Collection only No registration fees will be charged.
License No 1843




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்

கப்பட்ட அநீதிகள் மீண்டுமொருமுறை நடைபெறாமல் இருக்கவேண்டும் எனில் உண்மை கண்டறியப்பட வேண்டும். பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். அதே வேளை, போர்க்குற்றவாளிகள் தண்டிக் கப்பட்டே ஆகவேண்டும். நடந்தேறிய தமிழினத்திற்கு எதிரான கொடூரங்களுக்கு–பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்தால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும். இதனை ஐக்கிய நாடுகள் சபையிடமும் இலங்கை அரசிடமும் தொடர்ந்து வலியுறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருக்கவேண்டும். கூட்டமைப்பின் பலம் தமது வாக்குகளில்தான் தங்கியுள்ளது என்பதனை ஒவ்வொரு தமிழ் வாக்காளர்களும் மறந்துவிடக்கூடாது.

இந்நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் இனப்பிரச் சினையைத் தொடரவிட்டதால் இந்நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சர்வாதிகார ஆட்சி நடத்திய மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார். அதேவேளை, பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன, தமிழ் பேசும் மக்களின் அமோக வாக்குகளினால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மைத்திரிபாலவின் ஆட்சியில் இதுவரை உண்மை கண்டறியப்படல், பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு விடயம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், தமது ஆட்சிக் காலத்துக்குள் நாட்டினுடைய அரசியல் தீர்வு விடயம் உட்பட முக்கியமான பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால உறுதியாக உள்ளார். அவரின் கீழ் கடந்த 7 மாதமாக இயங்கிக் கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லாதபடியால் தமிழர் நலன் சார்ந்த பல கருமங்கள் நிறைவேற்றப்படவில்லை. எனினும், தற்போதுள்ள அரசுதான் தேர்தலின் பின் மீண்டும் ஆட்சியமைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆனால், இந்த அரசு மீண்டும் பெரும்பான்மை பலம் இல்லாமல் ஆட்சியில் ஏறும் நிலை வரலாம்.

எனவே, இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றால்தான் நாடாளுமன்றில் பேரம் பேசும் சக்தியாக நாம் திகழமுடியும்.

இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் ஆட்சியாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச சமூகமும் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளும் சேர்ந்து திட்டங்களைத் தீட்டி தமிழர் நலன் சார்ந்த கருமங்களை நிறைவேற்ற முடியும். அதில் முக்கியமாக இலங்கையில் 60 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு 2016 ஆம் ஆண்டில் வேண்டும் என அரசையும் சர்வதேச சமூகத்தையும் வலியுறுத்தித் தீர்வு விடயத்தில் நாம் வெல்ல முடியும். எனவே, கடந்த தேர்தல்களில் தொடர்ச்சியாக எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் கூட்டமைப்பை ஆதரிக்கவேண்டும். தமிழ் வாக்காளர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 'வீடு' சின்னத்துக்குத் தமது பொன்னான வாக்குகளைத் தவறாது அளிக்கவேண்டும்–என்றனர். (த–சி)

## மன்னார், திருமலை

கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்குப் பதிலாக மணிக்கூட்டுச் சின்னம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் இவ்வாறான வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவரின் செயலகத்திலிருந்து போலி வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் போலி வாக்குச் சீட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாதிரி வாக்குச் சீட்டில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயர் மூன்றாவதாக உள்ளதுடன் எதிரே வீட்டுச் சின்னமும் காணப்படும். ஆனால் தற்போது விநியோகிக்கப்படும் போலி வாக்குச் சீட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரை மூன்றாவதாகக் குறிப்பிட்டு, அதற்கு எதிரே மணிக்கூட்டுச் சின்னம் காணப்படுகின்றது. தேர்தலில் பொதுமக்களைக் குழப்பும் நோக்குடன் இவ்வாறான போலி வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த–5–56)

## வடக்கில்

தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த 3 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதன் போது வாக்களிக்கத் தவறியவர்கள் நேற்றையதினம் தமது பிரதேச மாவட்டச் செயலகங்களில் வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றைய தினம் தபால் மூல வாக்களிப்பு மாவட்டச் செயலகங்களில் இடம்பெற்றிருந்தது. வடக்கின் 5 மாவட்டங்களிலும் நேற்றைய தினம் மந்தமான வாக்களிப்பே பதிவாகியது.

யாழ்ப்பாணத்தில் 92 சதவீதமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 97 சதவீதமும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் 90 சதவீதமும் வாக்களிப்பு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. இவை இந்த மாவட்டத்தில் வாக்களித்த தபால்மூல வாக்காளர்களின் சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)

## மாற்றத்தை

விரும்புகின்றோம். பெரிய செயற்றிட்டங்களை வகுத்து தொழிற் பேட்டைகளை உருவாக்கி எமது பாரம்பரியத்தையும் விவசாய பின்புலத்தையும் மாற்றியமைக்க நாங்கள் விரும்பவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலாண்மைத் திறம் மிக்க நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பில், உலக வங்கிப் பிரதிநிதிக ளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக வங்கியில் இருந்து வருகை தந்த உயர் அதிகாரி மிங்சாங் கண்டி, காலி போன்ற நகரங்களில் மேற்படி நகர அபிவிருத்திகளைத் தொடங்கியிருப்பதாகவும், இதனை யாழ்ப்பாணத்துக்கும் கொண்டு வரவேண்டும் என்று உலக வங்கி அதிகாரிகள் மூலம் அறிவுறுத்தல் கிடைத்ததால் இந்தக் கூட்டத்தில் தாம் பங்குபற்றுவதாக அவர் குறிப்பிட்டார். அண்மையில் உலக வங்கியின் உப தலைவரை வொஷிங்டனில் முதலமைச்சர் சந்தித்ததாகவும் அதன் தொடர்ச்சியாகத் தம்மை நேரடியாகச் சென்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர்,

வடமாகாணம் இலங்கையின் மற்றைய மாகாணங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. வட – கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்கள் வேற்று மொழியையும் பிறிதான மதங்களையும் கலாசாரத்தையும் கொண்டுள்ளார்கள் என்பதை நீங்கள் அவதானத்துக்கு எடுக்க வேண்டும்.

மண்ணியல் ரீதியாகப் [illegible] வடமாகாணம் வித்தியா[illegible] றாகவே இருப்பதை அவதானிக்கலாம். வடமாகாணத்தில் நதிகள் இல்லை. நீர் வீழ்ச்சிகள் இல்லை. கிணறுகளிலும், குளங்களிலும் இருந்துதான் நீர் எடுக்க வேண்டியுள்ளது. சரித்திர ரீதியாகவும் நாங்கள் வேறுபட்டவர்கள். 2 ஆயிரம் வருடங்களுக்கு மேலான சரித்திரத்தைக் கொண்டவர்கள் எம் மக்கள். தற்பொழுது போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக வடமாகாணம் உள்ளது.

முதலில் எமது பிரதேசம் இயல்பான நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும். கண்டி, காலி போன்ற மற்றைய இரண்டு நகரங்களும் அபிவிருத்தி அடைந்த நகரங்கள். எம்மைப் பொறுத்த வரையில் அபிவிருத்தி அடையாத, மத்திய அரசினால் புறக்கணிக்கப்பட்ட ஒரு பிரதேசமே எமது பிரதேசம் என்பதை உணர வேண்டும்.

பொருளாதார ரீதியாகவும் எமது மாகாணம் சற்று வேறுபட்டது. எம்மைப் பொறுத்த வரையில் விவசாய அடிப்படையிலான பொருளாதார அவிருத்தியையே நாங்கள் நாடிநிற்கின்றோம். சிறிய இடைநிலை தொழில் முயற்சிகளில் ஈடுபடவே நாங்கள் விரும்புகின்றோம். பாரிய செயற்றிட்டங்களை வகுத்து தொழிற் பேட்டைகளை உருவாக்கி எமது பாரம்பரியத்தையும் விவசாய பின்புலத்தையும் மாற்றியமைக்க நாங்கள் விரும்பவில்லை.

மேலும் சுற்றுலாத்துறை போன்றவை எமது கலாசாரம், இயற்கை வளங்கள், சுற்றாடல் போன்றவற்றிற்கு அமைவாக விருத்தி செய்யப்பட வேண்டும். வானளாவும் பாரிய கோபுரங்களும் கட்டடங்களும் எமது சுற்றாடலுக்கு ஏற்றவையல்ல. எமது சுற்றாடலுக்கு அமைவாகவே அவிருத்தி செய்யப்பட வேண்டும்.

ஒன்றரை லட்சத்திற்கு மேல் எமது குடிமக்கள் தென்னிந்தியாவில் முகாம்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் திருப்பி அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு அழைக்கப்பட்டால் எமது மக்கட் தொகை அதிகமாகும் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும்.

அரசியல் ரீதியாக வடகிழக்கு மாகாணங்கள் தமது தனித்துவத்தை இலங்கை சுதந்திரம் அடைந்த காலந் தொடக்கம் வெளிக்காட்டி வந்துள்ளார்கள். எம்மை பிறமாகாணங்களுடன் சேர்த்துப் பார்த்ததால் எமது தனித்துவம் பாதிப்படைந்தது. 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் உதவியுடன் 13 ஆம் திருத்தச் சட்டம் வடகிழக்கு மாகாண மக்களுக்காகவே கொண்டு வரப்பட்டது.

ஆனால் மாகாண சபைகளை நாடு முழுவதும் ஏற்படுத்தி எமது தனித்துவத்தை நிலைபெறச் செய்யாமல் பாதிப்புள்ளாக்கிவந்துள்ளன தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள். 13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தரப்பட்ட குறைவான உரித்துக்களைக் கூட மகாவலி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற மத்திய அரசின் அதிகாரசபைகளுக்கு ஊடாக பிரித்தெடுத்துள்ளனர்.

அந்தவாறான ஒரு செயற்றிட்டத்தைப் போலவே இதையும் காண்கின்றோம். எம்முடன் கலந்தாலோசித்து எமக்கான நகர அபிவிருத்தியை ஏற்படுத்தாமல் மத்திய அரசு தான்தோன்றித்தனமாக இங்கு தமக்கேற்றவாறு ஏற்பாடுகளை நடாத்தி வருகின்றது என்று நான் கருதுகின்றேன். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எமக்கான அபிவிருத்தியை நாமே உருவாக்க வசதிகள் அளிக்கப்பட வேண்டும் – என்றார். (த–5)

## மன்னார்

மேற்கொள்ளவுள்ளார். எனவே அதற்குத் தேவையான செலவு களை மேற்கொள்வதற்குப் புலம் பெயர் உறவுகள் மற்றும் எமது மக்கள் நிதி உதவிஎய வழங்க முடியும்.

பல உறவுகள், மன்னார் ஆயர் இல்லத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். ஏனையோரும், அவ்வாறு உதவிகளைச் செய்ய விரும்பினால் மன்னார் ஆயர் இல்லத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியும்.

மேலதிக விவரங்கள் தேவைப் படுபவர்கள், மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசையின் 0775009440 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

## 45 கிலோ

ஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி காட்டுக்குழி தொண்டமானாறு பகுதியில் மாபெரும் கஞ்சா விநியோக நடவடிக்கை பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறைப் பகுதியில் கஞ்சாப் பொதிகள் கைமாற இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் தலைமையில் சென்ற விசேட பொலிஸ் குழு மேற்கொண்ட நடவடிக்கையில் இந்தக் கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸ் குழு லொறி ஒன்றைத் தொண்டமானாறுப் பகுதியில் வைத்து வழி மறித்துச் சோதனை செய்ய முயற்சித்தது. எனினும் குறித்த லொறி தப்பிச் சென்றதை அடுத்தே பொலிஸார் உசாரடைந்தனர்.

இதனை அடுத்து தொண்டமானாறுப் பகுதி தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தீவிர தேடுதலுக்கு உட்கொள்ளப்பட்டதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

அப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடுகள் தீவிரமாகச் சோதனைக்குள்ளாக் கப்பட்டபோது தொண்டமானாறு காட்டுக்குழி பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றைப் பொலிஸார் அதிரடியாகச் சுற்றி வளைத்தனர்.

இதன்போது வீட்டுக்குள் பொதி செய்யப்பட்ட நிலையில் 45 கிலோகிராமுக்கும் அதிகமான கேரளா கஞ்சாப் பொதிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டதாகவும், அப்பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்ததாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வும், தப்பிசென்றிருக்கும் லொறியையும் மேலும் சில சந்தேக நபர்களையும் மடக்க தீவிர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (த–109)

## எக்னெலிகொட

அனுமதி வழங்கியுள் ளது.

சத்யா மாஸ்டர் எனப்படும் கணபதிப்பிள்ளை சுரேஸ், நகுலன் எனப் படும் சுமதிபாலன் சுரேஸ் ஆகிய இருவருமே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்று வடமத்திய மாகாணத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமில் ஒப்படைத்திருந்தனர். அந்த முகாமின் பொறுப்பதிகாரிகளாகச் செயற்பட்டவர்கள் தொடர்பிலும் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரகீத்தைக் கடத்திய கருணா குழுவைச் சேர்ந்த இருவரும் வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். ஹோமகம நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவர்கள் நிறுத்தப்பட்டு, ஒரு மாதம் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

கருணா குழுவில் இருந்து செயற்பட்ட இவர்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து பணியாற்றியவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இது தொடர்பில், இராணுவத் தரப்பின் பதில் உடனடியாகக் கிடைக்கப் பெறவில்லை. (த–5)

## அரசு

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஐ.நா. அறிக்கைக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் பொறுப்பே தவிர அது கூட்டமைப்பின் பொறுப்பு அல்ல எனவும் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் செப்ரெம்பர் மாதம் முன்வைக் கப்படவுள்ள சர்வதேச விசாரணை அறிக் கைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியுள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'உதயனுக்கு' வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். அது தொடர்பில், பதிலளிக்கையிலேயே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா. அறிக்கைக்குப் பதில் வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு எந்தவொரு பேச்சையும் நடத்தவில்லை. நாம் இலங்கை அரசுடன், காணி விடுவிப்பு – தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் பேசியுள்ளோம். ஐ.நா. அறிக்கை அல்லது இதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் எந்தப் பேச்சுக்களும் நடைபெறவில்லை.

ஐ.நா. அறிக்கை செப்ரெம்பர் மாதமே வெளியாகவுள்ளது. அதற்கு முன்னதாக, அதில் என்ன உள்ளது என்பதை எப்படிக் கூற முடியும். அதில் என்ன உள்ளது என்று தெரியாமல் எப்படி பேச்சு நடத்த முடியும். மேலும், ஐ.நா. விசாரணை அறிக்கைக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அரசினுடையதே தவிர, கூட்டமைப்பினுடையது அல்ல என்று அவர் தெரிவித்தார். (த–5)

## மீண்டும்

கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் நேற்று மாலை சுழிபுரம் சந்திப் பகுதிக்கு அண்மையாக இடம்பெற்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, திடீரென மேடையில் ஏறிய முதியவர் ஒருவர் தனது கையில் வைத்திருந்த பிளேட்டினால் நெற்றியைக் கீறி, வழிந்த இரத்தத்தை தொட்டு வேட்பாளர் சரவணபவனுக்கு திலகமிட முற்பட்டார். இந்தச் சம்பவம் அங்கிருந்த எல்லோரையும் உணர்ச்சி வசப்பட வைத்தது.

யாழ்.பொதுநூலக எரிப்பின் பின்னர், வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக இடம்பெற்ற கூட் டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ் வரன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, கூட்டத்தில் இருந்த இளை ஞர் ஒருவர் தனது கையினை பிளேட்டினால் கீறி, யோகேஸ்வர னுக்கு இரத்த திலகமிட்டார். அவ் வாறு இரத்தப் பொட்டு இட்டமையினாலே, அந்த இளைஞன் பொட்டு அம்மான் என்று பின்னாளில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## பொலிஸ்

நிறுத்திவிட்டுத் தேர்தல் சுரொட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்தவேளையில் இளைஞர் ஒருவர் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தார். பொலிஸாரின் வாகனத்தைக் கண்டதால் அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பட்டை இழந்து நிறுத்தியிருந்த பொலிஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால் அதனைச் செலுத்திய இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. சடலம் தெல்லிப்பழை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த–36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

*விக்னேஸ்வரா வி.கழகத்தொடர்*

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகள் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் அணி மோதவுள்ளது. பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கென்றிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

*மறுமலர்ச்சி வி.கழகத்தொடர்*

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் இரண்டாம் கட்ட ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதிஅணிமோதவுள்ளது.(ம-23)



# யாழ். பல்கலையின் புகுமுக மாணவர்களுக்கான தடகளத் தொடரின் முடிவுகள்



அனைத்துப் பிரிவிலும் முதலாமிடத்தைக் கைப்பற்றிய முகாமைத்துவ பீடம்



அனைத்துப் பிரிவிலும் இரண்டாமிடத்தைக் கைப்பற்றிய கலைப் பீடம்

மாங்குளம் ஓக. 9

யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான தடகளத் தொடரில் கடந்த மாதம் 25ஆம் , 26ஆம் திகதிகளில் யாழ். பல் கலைக்கழக மைதானத்தில் நடை பெற்றது.

கலை, விஞ்ஞானம், மருத்துவம், முகாமைத்துவம், விவசாயம், பொறியியல், பிரயோகவிஞ்ஞானம், வியாபாரக் கற்கைநெறிகள் ஆகியபீடங்களையும் சித்தமருத்துவம் மற்றும் இணைமருத்துவம் போன்ற துறைகளையும் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்ட இந்தத் தடகளத்தொடரில் விஞ்ஞான பீடத்திலிருந்து சிறந்த தடகள வீரராக கே.அனோஜனும் சிறந்த தடகள வீரராகவும், சிறந்த வீரராகவும் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் டி.எல்.ஜே.என்.லியனகேயும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பெண்களில்சிறந்த தடகள வீராங்கனையாக முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த எச்.ஏ.ஏ.சேத்தனாசமோதனி சிறந்த தடகள வீராங்கனையாக கலைப்பீடத்தைச் சேர்ந்த ஆர்.ஜோபிதாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.



அனைத்துப் பிரிவிலும் மூன்றாமிடத்தைக் கைப்பற்றிய விஞ்ஞான பீடம்

குறித்த தொடரில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை முகாமைத்துவ பீடமும், இரண்டாம் இடத்தை கலைப்பீடமும், மூன்றாம் இடத்தை விஞ்ஞான பீடமும் கைப்பற்றின.

பெண்கள்பிரிவில்முதலாம்இடத்தை கலைப்பீடமும் இரண்டாம் இடத்தை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமும் மூன்றாம் இடத்தை விஞ்ஞான பீடமும் கைப்பற்றின. மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முதலாம் இடத்தை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமும் இரண்டாம் இடத்தை கலைப்பீடமும் மூன்றாம் இடத்தை விஞ்ஞானபீடமும் கைப்பற்றின.

*தகர்க்கப்பட்டவையும் படைக்கப் பட்டவையும்*

யாழ். பல்கலைக்கழக தடகளத் தொடரில் குண்டு எறிதலில் விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த ஆர்.எம். ஓ.டி,ரணசிங்க, ஈட்டிஎறிதலில் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் டி.எல்.ஜே.என்.லியனகே, 3 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கலைப் பீடத்தைச் சேர்ந்த எஸ்.லோஜிகா ஆகியோர் புதிய சாதனைகளைப் பதிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

# அரியாலை சனசமூக நிலையத்தின் உதைபந்தாட்ட தொடரின் முடிவுகள்

அரியாலை சனசமூக நிலையம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டங்களில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதிக்கொண்டது. இதில் அரியாலை ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கலைவாணி அணிக்கும் ஞான முருகன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஞானமுருகன் அணி, 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நாவாந்துறைசென்.மேரிஸ் அணிக்கும் சென்.றொக்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து.

நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்ற ஆட்டங்களில் ஊரெழு றோயல் அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. பாசையூர் சென்.அன்ரனிஸ் அணிக்கும் ஞானமுருகன்அணிக்கும்இடையிலான ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)


TONER HOUSE

உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள் ...

ClearVid CMOS sensor

4 Ch Packege — 29900/=

| | |
|---|---|
| 4 Ch DVR | 1 |
| 800 TVL CMOS Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 2 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 46900/=

| | |
|---|---|
| 8 Ch DVR | 1 |
| 800 TVL CMOS Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

Effio

4 Ch Packege — 46900/=

| | |
|---|---|
| 4 Ch HD DVR | 1 |
| 750 TVL SONY Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 79900/=

| | |
|---|---|
| 8 Ch HD DVR | 1 |
| 750 TVL SONY Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 8 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

AHD Analog High Definition

4 Ch Packege — 49900/=

| | |
|---|---|
| 4 Ch AHD DVR | 1 |
| 1.3MP 960P AHD Camera | 4 |
| 500GB HDD | 1 |
| BNC | 8 |
| DC Jack | 4 |
| Power pack 12V5A | 1 |
| Camera Stand | 2 |
| 3C 2V Cable | 50M |
| Power Cable | 50M |

8 Ch Packege — 89900/=

| | |
|---|---|
| 8 Ch DVR | 1 |
| 1.3MP 960P AHD Camera | 8 |
| 01TB HDD | 1 |
| BNC | 16 |
| DC Jack | 8 |
| Power pack 12V10A | 1 |
| Camera Stand | 4 |
| 3C 2V Cable | 100M |
| Power Cable | 100M |

free mobile view
free internet view

DVR , HDDVR, AHDDVR
Sony Effio Cameras, Cmos Camers
AHD (1.0MP, 1.3MP) Cameras
IP (1.0MP, 2.0MP) Cameras
PTZ Cameras, PTZ Stands
Power pack (12V 1A - 30A)
BNC Connector DC Jack
DVR Rack, DVR Cabinet .
போன்றவற்றை உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிநவீன cctv camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- உங்கள் கணனிகளிலும் கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும். ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/2, Parameswara Junction, Palaly Road. T.P: 021 300 3399 Mob: 0775 427 426


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேவை

றொட்டி,றைஸ் வேலைக்கு ஆள்கள் தேவை.

**தொடர்பு : 075 242 1936**

### கணக்காளர் தேவை

கணக்காய்வு துறையில் அனுபவமும், திறமையும் வாய்ந்த கணக்காளர் தேவை. (ஆண்கள் மட்டும்) திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்

**தொடர்பு: 021 222 2409** (61972) (9.3.7)

### தவறிவிட்டது

சின்னத்தம்பி என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் B1081012D யாழ் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு: 078 521 0573**

### வேலைவாய்ப்பு

யாழில் தீவுப்பகுதியில் பாதுகாப்பு சேவைக்கு Visiting Officer ம், Guards ம் (JSO) உடன் தேவை. மேலும் கொழும்பில் Hospitals, Garments, Hotels முதலிய இடங்களுக்கு OIC, SSO, JSO, LSO வும் தேவை. தங்குமிடம் இலவசம் உணவு சகாயவிலையில். சம்பளம் 20000/=, 30000/= வரை. சிங்களம் / ஆங்கில அறிவுக்கு முன்னுரிமை .

**தொடர்பு: 0712446926, 0112871280**

### நாய்க்குட்டி விற்பனைக்கு

4? நாள்கள் நிரம்பிய நல்லின டோமன் நாய்க் குட்டிகள் (பூச்சி நீக்கப்பட்டது) விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 254 5296**

### விற்பனையாளர்கள் தேவை

பிடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. பெண்கள் மட்டும். வயது 18 - 35 சம்பளம் பேசித்தீர்க்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் அல்லது ...குவில், நல்லூர் பகுதிகளில் சிறிய கடை வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்பட மாட்டாது.

**தொடர்பு: 071 462 0806**

### விற்பனைக்கு

ரெஸ்ரோறன்ற் ஒன்றின் கண்ணாடிக் கதவுகள்,கலர் பிறின்டர், பில்போடும் Dotmatric பிறிண்டர், பெரிய கிடாரம், 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்ட கணினி மேசை நிறுவனங்களுக்கு ஏற்றது (Work Station Partition)

**தொடர்பு: 071 462 0806**

### பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள வீட்டுக்கு பணிப்பெண் தேவை. வயது 25 - 45 சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

**தொடர்பு: 077 030 3982**

### கடை,வீடு விற்பனைக்கு

அரியாலை,115, திருமகள் வீதியில் உள்ள 3 பரப்புக்காணி,கடை வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0776755983, 072 662 0681**

### வேலையாள்கள் தேவை

பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சமையல் உதவியாளர்,ரீமேக்கர்,உணவு பரிமாறுபவர் உணவு பொதி செய்பவர்கள் தேவை.(அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

**தொடர்பு : 077 161 5694**

### வீடு வாடகைக்கு

இல.5, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக் குளியில் மாடிக் கட்டடம், நிறுவனங்கள் அலுவலகங்களுக்கு வாடகைக்கு உண்டு

தொடர்பு:- 077 476 7119

### கணினி பழுதுபார்த்தல்

பழுதடைந்த கணினிகளை உங்கள் வீடுக ளுக்கு வந்து சிறந்த முறையில் பழுது பார்த்து திருத்திக் கொடுக்கப்படும் புதிய கணினிகளும் வடிவமைத்துத் தரப்படும்.

தொடர்பு:- 071 547 6571
077 152 6083

## மலேசியாவில் வேலை வாய்ப்பு

**கையுறை தயாரிக்கும் பெக்டரியில்**



HAND CLOVES FECTORY
GENERAL WORKER
MALE -57 Nos

**01.ஜென்றல் வேக்கர் - ஆண்**

வயது எல்லை 18-35 வரை
சம்பளம் RM 900+OT
( LKR. 52,840/=)

8 மணி நேர வேலையும் மேலதிக வேலை நேரமும் உண்டு நாளொன்றுக்கு 8 மணிநேர வேலை ஒரு வாரத்தில் 48 மணிநேரம் நேர்முகப்பரிட்சை வெளி நாட்டு முகவர்களால் நடாத்தப்படும்.

3 வருடங்கள் வேலை வாய்ப்பு .தங்குமிடம் .மருத்துவம் . போக்குவரத்து .ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமானச்சீட்டு ஏனையவை மலேசியா சட்ட திட்டங்களுக்க அமைவாக

**GALAXY**
FOREIGN EMPLOYMENT AGENCY
NO.12 NORIS CANAL ROAD,MARADANA COLOMBO -10
(LL No: 2486) TEL : 0112-698912 , FAX : 0112698967

**HOT LINE :0778-200 222, 0713-355 666**

## Vacancies

இலங்கையின் பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், வவுனியா மன்னார் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளிநொச்சி, முள்ளியவளை கிளைகளுக்கு பின்வருவோர் தேவை.

1. English Teacher
2. Course Counselor
3. Receptionist
4. Computer Teacher

EPF, ETF உட்பட தகுந்த சம்பளம் வழங்கப்படுவ துடன் தூர இடங்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர் களுக்கு தனி / குடும்ப தங்குமிட வசதி வழங்கப்படும்

Sent Cv's within one week T.P: 0777596148

**BRITISH COLLEGE** 585, Peradeniya Rd, Kandy.
Email : Career@bcestudy.com
Britishcollegekandy@gmail.com

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

### த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

ஸ்தாபனத்தின் புடைவை தினுசுகளுக்கு மாபெரும் ஆடித் தள்ளுபடி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

சாறி
கொட்டன் சாறி
பஞ்சாபி சில்க்
பஞ்சாபி கொட்டன் } 500/= முதல்
ஜீன்ஸ் - 750/=
சேட் - 250/=

மேலும் அனைத்து புடைவைகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44,42 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி பொன்னையா



தாவளை இயற்றாளையைப் பிறப்பிடமாகவும் பத்தன் மோட்டை கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் கொடிகாமம் பிரபல வெற்றிலைக்கடை உரிமையாளர் சிறி அவர்களின் மாமனார் 07.08. 2015 இறைபதம் எய்தினார். அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

உள் மாக்கற்
கொடிகாமம்.

உதயகுமார் களஞ்சியம்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(C 11978)

## VACANCIES

**MANAGEMENT TRAINEE AND MARKETING EXECUTIVE (MALE & FEMALE)**

We are a company dealing with Children educational programme and there is opportunity for Self - motivated, committed individual to take up the

**SALES EXECUTIVE**

**Requirements**
* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

**If you believe that you are Please e-mail or contact Branch Manager: Phone No: 077 356 6835**

**Benifits**
- An attractive salary
- Commissions payments
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Traveling allowances
- Telephone facilities
- Career development (Management Position)

**Pioneer House (PVT) Ltd.**
No:100, 2nd Floor, Manipay Road, Jaffna.
(61964)(10.6) E-mail: jaffnapioneerthouse@gmail.com

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சண்முகராசா

(ராசன் ரவல்ஸ் உரிமையாளர்)



82/17, 3 ஆம் ஒழுங்கை பருத்தித் துறை வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சண்முகராசா(ராசன்-ரவல்ஸ் உரிமையாளர்) நேற்று (08.08.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் கனகரத்தினம்(முன்னாள் மாநகர ரபை உறுப்பினர்), செல்வராசா, மகாலட்சுமி, நவமணி(பம்பா), கனகசுந்தரம் (A.CDC), குமரேசன் (பொறின் ஸ்ருடியோ) காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றோசம்மா,விக்னேஸ்வரி, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான சாமி(அம்பாள் ரவல்), தாமோதன்(தரன் ஸ்ருடியோ) மற்றும் சறோஜினிதேவி, நாகேஸ்வரி, நீற்ரா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
077 985 6145

(61988)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் புவனேஸ்பரன்



யாழ் மந்திகையைப் பிறப்பிடமாகவும் யாலப்பை, மாதனையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் புவனேஸ்பரன் 06.08. 2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் சுப்பையா மீனாட்சி தம்பதியரின் மருமகனும் யோகேஸ் வரியின் அன்புக் கணவரும் ஜெயலட்சுமி (ஜேர்மனி), தனலட்சுமி(லண்டன்), புஸ்பவதி (லண்டன்), இராசலட்சுமி(ஜேர்மனி), லோ ஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மண்டலேஸ்வரன் (ஜேர்மனி), கணேசமூர்த்தி (லண்டன்), பாலகிருஸ்ணன் (லண்டன்), கனகரத்தினம்(ஜேர்மனி), தக்கன்(கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற விக்னேஸ்வரமூர்த்தி, பாலகிருஷ்ணப்பிள்ளை, பாக்கியலட்சுமி, மகேஸ்வரி, தர்மலிங்கம், பறுவதாதேவி, பூரணாதேவி(சிவக்கொழுந்து), யோகேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் லோகநாதன்(லண்டன்), லோகராணி, லோகசௌந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஞ்சினி, வினோதா, பானுஜா, தினேஸ், கஜானன், தனுஜன், வினுஜன், தட்சிகா, நிதுஷன், அபினாஷ், அபிதன், அபியுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2015) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாலப்பை,
மாதனை,
பருத்தித்துறை.

தகவல் :-
குடும்பத்தினர்.
021 320 5105

(C 11980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பொன்னையா (வீரசிங்கம்)



தாவளை இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் பத்தன் மோட்டையை வசிப்பிடமாகவும் மடத்தடி வீதி, கொடிகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா 07.08.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா திலகவதியின் ஆருயிர்க் கணவரும், ஞானம்பலவாணர் (ராசா-சுவிஸ்) காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, ஞானேஸ்வரன், சிவராசா மற்றும் சிவசோதி (கனடா), சிவநேசன் (கனடா), காலஞ்சென்ற வசந்தகுமார், ரவிக்குமார் (ரவி-சுவிஸ்) சிவராணி (யசோ-கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருப்பூங்கோதை (சுவிஸ்), பத்மகாந்தன் (கனடா), பகீரதி (கனடா), புவனேஸ்வரி (சுவிஸ்), சிவராசா (சிறி வெற்றிலைக் கடை-கொடிகாமம்) ஆகியோரின் மாமனும், சுஜீவன், கார்த்திகாயினி (சுவிஸ்) ரஜீவன், காயத்திரி (சுவிஸ்), மயூரன் (கனடா), மீனுஜா (கனடா), ரவீனன் (சுவிஸ்), ரானுஷா (சுவிஸ்), துர்க்கா (கனடா), லதீசன் (கனடா), பிரதீசன் (கனடா), லக்சன் (கனடா), சனுஷன், தனுஷன், கானுஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பேரனும், சைலன், லக்மன், அஸ்வின், கயலின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் கட்டைபறித்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0772784730 (சிறி)
0773621166 (யசோ)
0775270888 (சனு)
கண்டி வீதி, மடத்தடி, கொடிகாமம்.

தகவல்:
செ.சிவராசா குடும்பத்தினர்
(சிறி வெற்றிலைக்கடை- கொடிகாமம்)

## 69 மில்லியன் டொலருக்கு கைமாறுகிறார் மரியா

ஆர்ஜென்டினாவின் பிரபல கால்பந்து வீரர் ஏஞ்சல் டி மரியா, தற்போது இங்கிலாந்து கழகத் தொடரில் மான்செஸ்டர் யூனைற்டட் அணிக்காக விளையாடி வருகிறார். இந்நிலையில், 4 ஆண்டு ஒப்பந்தமாக அவர் பி.எஸ்.ஜி. அணிக்கு கைமாறவுள்ளார்.

நாளை திங்கட்கிழமை டோஹாவில் நடக்கும் மருத்துவ தேர்வுக்கு பிறகு மரியா அணி மாறுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 69 மில்லியன் டாலர் மதிப்பில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. இங்கிலாந்து கழகங்களுக்கிடையிலான தொடரில்விளையாடும் வீரர்களில் பெறுமதி மிக்க வீரராக கருதப்படுபவர் மரியா என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

German Institute
German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யிலிருந்து வருகைந்த ஆசிரியரால் நடைபெறுகின்றது.
10, Palaly Road, Jaffna.
T.P: 077 160 4823

English for Kids
Since 1997 சிறுவர்க்கான ஆங்கிலம்
40 % Discount T&C Applied
KU's methodology
5 years-16 Years



வடமாகாணத்தின் முதல் தர நவீன ஆங்கிலக் கல்லூரியில், உங்கள் செல்வங்கள் நற்பழக்க வழக்கங்களுடன், விளையாட்டாகவும் மன மகிழ்வாகவும் ஆங்கிலத்தை சிறு வயதிலேயே கற்று ஆங்கிலத் தொடர்பாடல் திறனிலும் ஆளுமையிலும் சிறப்பதை காண விரும்பினால் இப்போதே அழையுங்கள்
-0767302882 / 021-3208342 http://edu.kugroup.info/ke
Knowledge Universe
No 626,1/1, K.K.S Rd,Jaffna

உதயன் advt@uthayan.com 0215611111

ATMC AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE
Jaffna Campus
நேர்மையான......
செலவு குறைந்த.....
பாதுகாப்பான வழியில்......
அவுஸ்திரேலியா செல்வதற்கு
அழையுங்கள்:- 077 933 93 53
O/L 5 பாடச் சித்தியுடன் - யாழ் மண்ணில் 1 வருடம் படித்துவிட்டு செல்லலாம்.
A/L 3 பாட சித்தியுடன் - யாழ் மண்ணில் 6 மாதங்கள் படித்துவிட்டு செல்லலாம்.
பட்டதாரிகள் நேரடியாக செல்ல முடியும்.

## வடமாகாண G.C.E.(O/L) க.பொ.த.(சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் வழங்கப்படும் முற்றிலும் இலவசக் கருத்தரங்கு

### நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 12-08-2015 புதன் | ஊர்காவற்துறை பிரதேச செயலகம் | காலை 8.30 – பி.ப 3.00 |
| 13-08-2015 வியாழன் | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 – பி.ப 3.00 |
| 14-08-2015 வெள்ளி | யாழ் வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 7.00 – பி.ப 3.00 |
| 15-08-2015 சனி | யாழ் வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 7.00 – பி.ப 3.00 |
| 16-08-2015 ஞாயிறு | யாழ் வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 7.00 – பி.ப 3.00 |
| 19-08-2015 புதன் | உருத்திரபுரம் மகா வித்தியாலயம் | காலை 8.00 – பி.ப 3.00 |
| 20-08-2015 வியாழன் | கற்சிலை மடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 – பி.ப 3.00 |
| 21-08-2015 வெள்ளி | மன்னார் அல் அஷார் மகா வித்தியாலயம் | காலை 8.00 – பி.ப 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1.வே.தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2.K.வசந்தன் (Trained Teacher)<br>3.S.மணிமாறன் (Trained Teacher)<br>4.M.லிங்கேஸ்வரன் B.sc |
| விஞ்ஞானம் | 1.வே.சுந்தரேஸ்வரன் D.G.M, தேசிய லொத்தர் சபை<br>2.V.பிரேம்குமார். P.H.I யாழ்ப்பாணம் |
| தமிழ், வரலாறு | 1.S.நடராஜா B.A (Hons)<br>2.K.திவாகர் B.A(Hons)<br>3.S.ஐங்கரன் J.P., B.A(Hons)<br>4.N.தமிழினியன் B.A(Hons) |

- ❖நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- ❖Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- ❖25 வருட விஞ்ஞான வினாவிடைத்தொகுப்பு. இலவசமாக வழங்கப்படும்.
- ❖G.C.E(O/L) கடந்தகால வினாவிடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

பே. இளமுருகன் B.sc
0779073593
கே. சக்திதரன் சேர் (AD)
0778429649
முருகானந்தன் சேர்
0718561252
S.ஐங்கரன் 0777157779

இலவசக் கருத்தரங்கின்
முழு அனுசரனையாளர்
சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி LLB
தொ.இல 0771133400, 0112327524

"அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறவும்"

ஊடக அனுசரணை: உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org